
இதழ்–31
16.08.2021
பல்சுவை மின்னிதழ்
பெருவெள்ளத்திற்கான பயணம்

# உள்ளம் பெருங் கோவில் ஊனுடம்பு ஆலயம்




இறப்பு, பிறப்பு போன்ற கிருமித்தொற்று அதிகம் ஏற்படக்கூடிய நிகழ்வுகளை தீட்டுக்குரிய நிகழ்வுகளாக உருமாற்றி ஆலயங்களுக்குள் பிரவேசிப்பதை மட்டுமன்றி வீடுகளுக்குள் பிரவேசிப்பதையே தடுத்திருந்தது ஆன்மீகம்! ஆன்மீக கருமங்களை உற்றுநோக்கினால் கிருமித்தொற்று நீக்கிகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டகருப்பதை காணலாம். மஞ்சள், வேப்பிலை என்பன பரவலாக பல இடங்களில் பயன்படுத்தப்படுவதை காணலாம்.

அந்த வகையில் இப்போது மனித குல வரலாற்றிலேயே என்றுமில்லாத ஒரு பேரழிவு கிருமித்தொற்று வழியாக வந்து முழு உலகையுமே உலுக்கிக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் முக்கிய ஆலயங்கள் பலவற்றின் வருடாந்த மகோற்சவமும் தற்போது ஆரம்பித்துள்ள இந்த நேரத்தில் இலங்கையில் கொரோனா கிருமித் தொற்றால் ஏற்படுகின்ற இறப்பு வீதமும் தொற்று பரவல் வீதமும் அதிகரித்த வண்ணமே உள்ளது.

ஆலயம் செல்வது சாலவும் நன்று என்று தானே ஆன்மீகம் சொல்லித் தந்திருக்கிறது. புண்ணிய காலமாக கருதப்படும் இந்த மகோற்சவ காலங்களில் ஆலயம் செல்லாமல் இருப்பது முறையாகுமா? தெய்வத்தின் கோபத்திற்கு உள்ளாகமாட்டோமா? என்கிற மேலோட்டமான கேள்விகளால் ஆலயம் செல்வோர் எண்ணிக்கை அதிகமாகலாம். இதனால் கொரோனா அபாயமும் அதிகமாகலாம்.

ஆலய வழிபாட்டை சாதாரண காலங்களில் தான் ஆன்மீகம் வலியுறுத்துகிறது. இதுபோன்ற இடர்காலங்களில் அல்ல. ”உள்ளம் பெரும் கோவில் ஊன் உடம்பு ஆலயம்” என்று சொல்லப்பட்டதை மறந்துவிடக் கூடாது. எங்கும் இருப்பான் இறைவன் என்றால் இந்த இடர்காலத்தில் நாம் வீட்டிலிருந்தே மனதார இறைவழிபாட்டை மேற்கொள்ளலாம் அல்லவா! மேலும் அறிவியலின் கிருமி ஆன்மீகத்தில் தீட்டு என்று சொல்லப்படுவதால் அந்த தீட்டுக்காலத்தில் ஆலய வழிபாட்டை தவிர்க்குமாறு தானே ஆன்மீகம் வழிமொழிகிறது.

எனவே, புறக்கண்ணால் இதுவரை கண்டுகளித்த இறை கோலத்தை இனி அகக்கண்ணால் பிரார்த்திப்போம். வருகின்ற வருடம் யாவும் சரியாகி எல்லோரும் ஆலய வழிபாட்டில் ஒருசேர கலந்து கொள்ளும் ஒரு சூழலை உருவாக்கித் தருமாறு உளமாற வேண்டுதல் செய்வோம்.

*மெய்ப்பொருள் காண்பது அறிவு*

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவிர்ணா

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

வடிவமைப்பாளர்
வ. குணநிதன்


# இவ்விதழில் துமித்துளை...


04 வாயைத் திறவடா

06 சித்திராங்கதா

10 குழந்தைகளில் ஏற்படும் இரும்புச்சத்துக் குறைபாடு

12 யார் சேனாதிபதி?

14 தாயுமானவரின் சமய சமரசம்

16 தோற்றுவிட்டேன்

19 கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

21 நானும் ஒரு சாக்கடை தான்!

22 முதலாளித்துவம்

24 ஈழச்சூழலியல்

28 ராட்சசன் வேண்டாம். ரசிகன் வேண்டும்.

35 பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம்

39 சிங்ககிரித்தலைவன்

42 குறுக்கெழுத்துப்போட்டி

43 டென்னிஸ் உலகின் புதிய இளம் நட்சத்திரம் ஜான்னிக் சின்னர்

# வாயைத் திறவடா!

வானமகள் யாரைத்தான் அப்படி காதலித்தாலோ தெரியவில்லை. இரண்டு நாளாக அழுது கொண்டே இருக்கிறாள். அவளது கண்ணீரான மழைநீர் வழமையாக நிற்கும் இடங்களிலெல்லாம் கட்டிடங்கள் கட்டி நிரப்பி விட்டோம். அது தங்க இடமில்லை. சாலைகளில் இறங்கி மறியல் செய்ய ஆரம்பித்து விட்டது மழை நீர். முகவரிகளைத் தொலைத்த முகிலினங்கள் கவலையில் வடித்த கண்ணீரை மழையென்று சொன்னார்கள் சிலர். முகவரிகள் தொலைவது எப்போதும் கவலையல்ல. விரும்பியே சில முகவரிகள் தொலைக்கப்படுவதும் உண்டு.

“ மழை கவிதை கொண்டு வருது
யாரும் கதவடைக்க வேண்டாம்!
ஒரு கருப்புக்கொடி காட்டி
யாரும் குடை பிடிக்க வேண்டாம்!
இது தேவதையின் பரிசு யாரும்
திரும்பிக் கொள்ள வேண்டாம்!
நெடுஞ்சாலயிலே நனைய
ஒருவர் சம்மதமும் வேண்டாம்!
அந்த மேகம் சுரந்த பாலில்
ஏன் நனைய மறுக்கிறாய்!
நீ வாழவந்த வாழ்வில்
ஒரு பகுதி இழக்கிறாய்!
நீ கண்கள் மூடி கரையும்போது
மண்ணில் சொர்கம் எய்துவாய்! ”

என்று வைரமுத்து சொன்ன கவிதையை ஆதரிப்பதா நிராகரிப்பதா என்ற குழப்பத்தில் மழையில் நனைந்தும் நனையாமலும் ஒருவன் அந்த தெருவில் நடந்து போகிறான். கறுப்புக்கொடி காட்டக் கூடாது என்பதால் புத்தகப்பையையே அவன் குடையாக்கி இருக்க வேண்டும். ஓடிச் சென்று அவனிடம் கேட்டேன். “தம்பி எங்க போறாய்?”

நானோ என் கேள்வியோ அவனையோ அவனது நடையையோ எந்த வகையிலும் பாதிக்கவில்லை. அவனது வேகத்தில் சிறுதும் மாற்றமின்றி நடையை தொடர்ந்தான்.



ஊரே வேடிக்கை பார்த்தது. அப்படியென்றால் அவர்களுக்கு இவனைப்பற்றி ஏதோ தெரிந்திருக்க வேண்டும். எல்லோரையும் ஒதுங்க வைத்த மழையையும் பொருட்படுத்தாமல் இந்தளவு வேகமாக, பாடசாலைகள் எல்லாம் இறுகப் பூட்டப்பட்ட இந்த கொரோனா காலத்தில், பாடசாலை சீருடையில் காரணமில்லாமலா போகிறான்? அறிய ஆவல் கொண்டேன். அருகிலிருந்தவர்களை கேட்டேன்.

“படித்துப் பைத்தியமானவர்கள் பலர். படிக்காமல் பைத்தியமானவர்கள் சிலர். படிக்க முடியவில்லையே என்று பைத்தியமானவன் இவன்.”

“நாங்க படிக்கிற காலத்தில எங்கள விட எங்கட புத்தகப்பைகள் பாரம் கூட. புத்தகங்கள் வாழ்க்கையை நிமிர வைக்கும் என்டாங்கள். எங்கட முதுக அந்த புத்தகங்கள் கூன வைச்சது தான் மிச்சம்! புத்தகங்கள், கொப்பிகள் எதுவுமே இப்ப தேவையில்லைத்தானே தம்பி! எல்லாமே போன்ல வந்திட்டுத்தானே. அதுதான் வாங்கி வைச்ச புத்தகப்பை சும்மா கிடக்கென்டு தலையில கவிட்டு வைச்சிட்டு மழைக்க விளையாடிட்டு திரியுறான் வெறும் பயல்”

“படிப்பிக்கிறவங்களுக்கு சம்பளம் காணாதாம். அதால அவங்க படிப்பிக்க மாட்டாங்களாம். எங்களை படிப்பிக்க வைக்கிறதுக்கு வீட்டிலயும் சம்பளம் காணாதாம். கொரோனாவ நிப்பாட்டி பள்ளிக்கூடங்களை திறக்க வைக்க கடவுளும் விரும்பேல. ஆக மொத்தம் மாதா, பிதா, குரு , தெய்வம் என்ற நாலு பேருக்குமே நாங்க படிக்கிறதில நாட்டம் இல்லாத போது ஏன் படிப்பான்? அது தான் வேலைக்கு வெளிக்கிட்டான் போல”

“கல்வி இனி இலவசமா கிடைக்கப் போறதில்லை. அதுதான் தந்த இலவசப் புத்தகங்களை எல்லாம் பழைய பேப்பருக்கு கொடுத்திட்டு நடந்து போகுது பெடி”

“முகமூடிய மறந்து போய் வீட்டை விட்டுட்டு வந்துட்டான் தம்பி. அங்கால பொலீஸ் நிக்குது. அதுதான் முகத்தை மூடிட்டுப் போறான் முட்டாப் பயல்”

“காசில்லன்னு வேலைக்கு போனா அங்கயாச்சும் நிம்மதியா விடுறானுகளா? பிள்ளை வயசு, பேரப்பிள்ளை வயசு இருக்கிற வயசுக்கே வராத சின்னப் பிள்ளைகளுக்கு சேட்டை விடுறாங்கள் தம்பி! இந்த ஊரில இருக்க வேணாம்னு தான் பக்கத்து ஊருக்கு போறான். பாவம்! அங்க நிலைமை இத விட மோசம்னு அவனுக்கு தெரியல.”

இப்படி ஆளாளுக்கு ஒவ்வொரு விளக்கம் கொடுக்கிறாங்க. அவனா வாயத் திறக்காததால இங்க பல வாய்கள் திறந்திருக்கு. ஒரு நாள் அவன் வாய் திறந்தாத்தான் இந்த வாய்கள் எல்லாம் மூடப்படும். திறப்பானா? என்ற ஆவலுடன் நான்!

# சித்திராங்கதா

காவ்யமோகன்

## வன்னியர் விழா

நல்லூர்க்கோட்டையின் கிழக்கு வாசல் திறந்திருக்கிறது. வயல்கள் மலிந்த விளைநிலங்களை அண்மித்த பகுதியில் உழவர்களின் காவற் தெய்வமான வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்தை ஒட்டி அமைந்திருந்தது கோட்டையின் கிழக்கு வாசல்.

கொம்புத்தாரைகள் தொடர்ந்து இசைக்க வன்னியர் வரிசை கோட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது. கிழக்கு மூலை, மேற்கு மூலை ஆகிய வன்னிமைகளின் அதிகார மிக்க தலைவனாய் இருந்த வன்னியத்தேவன் தன் நிலைக்கு உரித்தான பவளக் குடையுடனும், சாமரத்துடனும் வரிசையில் வந்து கொண்டிருந்தான்.

அவனைத் தொடர்ந்து பனங்காமம், முள்ளியவளை, கருநாவற்பத்து, தென்னமரவடி, மேல்பத்து, கரிகட்டு மூலை, செட்டிகுளம்பத்து ஆகிய வலிமை மிக்க வன்னிமைகளின் வன்னியர்களும் வந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து வன்னியர்களிலே கூடிய சுதந்திரங் கொண்டிருந்த "தனியுண்ணாப் பூபால வன்னியன்" என்ற புகழ் மிக்க விருதினையும் பெற்றிருந்த வயதில் மூத்த திருகோணமலை வன்னியார் வந்து கொண்டிருந்தார். ஆட்சி நிர்வாகம் தாண்டி கோணேசர் கோயிலின் வழமைகளையும், நிறுவனங்களையும், நிலங்களையும் பராமரிக்கும் உயர் பொறுப்பில் இருந்ததனாலே திருமலை வன்னியனார் சுதந்திரம் மிக்கதொரு வன்னியனராய்த் திகழ்ந்தார். மரகத சிம்மாசனத்தை தனக்கென கொண்டிருந்த ஒரே வன்னியர் திருமலை தனியுண்ணாப் பூபால வன்னியனார் என கோணேசர் கல்வெட்டு இன்றும் கூறி நிற்கிறது.

திருமலை வன்னியரைத் தொடர்ந்து வெற்றிவாள், கவசம், கணையாழி போன்றவற்றைக் கொண்ட சமக்கட்டினை சின்னமாகக் கொண்ட கொடியுடன் ஒரு வன்னியர் கூட்டம் வந்து கொண்டிருந்தது. அவர்களே "ராஜவன்னியர்கள்" என்ற விருதினை தக்க வைத்திருந்த புத்தளத்து முக்குவ வன்னியர்கள் ஆவர். சமூக அமைப்பில் அவர்கள் ஏனைய வன்னிமைகளிலிருந்து வேறுபட்டவர்களாக இருந்தனர்.

தமக்கென தனியாக பதினெட்டு அங்கத்தவர்களைக் கொண்ட "முத்திர கூடம்" என வழங்கிய நீதிமன்றம் ஒன்றை அமைத்து அதன் வழியே நீதி வழங்கி வந்தனர். அரச நீதியைக் காட்டிலும் ராஜவன்னியரது முத்திரகூட நீதி மீது வன்னிமக்கள் பெருநம்பிக்கையும் மதிப்பும் கொண்டிருந்தனர்.

வன்னியர்களைத் தொடர்ந்து ஒவ்வொரு வன்னிமைகளின் முதலியார்கள் முதல் தலையாரிகள் வரை வரிசையில் திறைப்பொருட்களை கொண்டு வந்தனர். யானைகள், குதிரைகள் தொடர் ஊர்வலமாய் வந்து கொண்டிருந்தன. யானைகள் பெரும்பட்டாளமாய் வந்து கொண்டிருக்கின்ற காட்சி காண்கின்ற எல்லோர் கண்களிற்கும் பெருவிருந்தாக அமைந்திருந்தது. (இவ்வாறு முப்பத்தாறு யானைகளை அரசன் ஆண்டு தோறும் திறையாகப் பெற்றதாக போர்த்துக்கேய அறிக்கைகள் குறிக்கின்றன.)

தலையாரிகளும் பிற தலைவர் களும் உணவுப் பொருட்கள், கனிவர்க்கங்கள், கோழிகள் என தத்தம் தகுதிக்கேற்ப பொருட்களைக் கொண்டு வந்தனர்.

வன்னியர் விழாவின் விருந்தினர்கள் யாவரும் மரியாதையுடன் வர வேற்கப்பட்டு அரசவையில் கூடி யிருந்தனர். அவர்களோடு மந்திரி ஏகாம்பரனார், ஏனைய அமைச்சர்கள், சேனாதிபதி மகிழாந்தகன், வருணகுலத்தான், மாகாண அதிகாரங்கள், திருநெல்வேலிப் புலவர் அவையினர் என எல்லோரும் அந்த அவையில் கூடியிருந்தனர். தமிழால் ஆழப்பட்ட அந்த தேசத்தின் பெருந்தலைமைகள் எல்லோரும் கூடிநின்ற பெருமண்டபமாய் நல்லூ ர்க் கோட்டை அரண்மனை அன்றி ஒளிவீசி பிரகாசித்தது.
கட்டியக்காரன் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

“ராஜாதி ராஜ - ராஜகுலதிலக - சத்ருசம்கார - ரணகளதீர- பரராஜசேகர- மாவீர- மாமன்னர்- சங்கிலி குமார பூபதி வருகிறார்.”

ராஜநடையுடன் வந்து கம்பீரமாய் நின்றார் சங்கிலிய மகாராஜா. அவையோர் எல்லோரும் எழுந்து வணங்கி நின்றனர்.

கம்பீர குரலில் சங்கிலியன் பேசத் தொடங்கினான்.

“அவையோர்க்கும் வருகை தந்திருக்கும் வன்னியோர்க்கும் என் வணக்கங்கள்”

எல்லோரும் வணங்கி நிற்க சங்கிலியன் அரியாசனத்தில் அமர்ந்தான்.

“வன்னி வேந்தர்கள் யாவரையும் நல்லை அரண்மனைக்கு வாஞ்சையோடு வரவேற்கிறேன். இவ் வன்னியர் விழாவிற்கான அவசர காரணம் திறைகோரும் நோக்கமன்று என வன்னியர்கள் உணர்வர் என நான் முழுமையாக நம்புகிறேன்.”

என்று சங்கிலிய மகாராஜா கூறிய போது வன்னியர்கள் யாவரும் அதை ஆமோதிப்பது போல் தலையசைத்தனர்.

சங்கிலியன் ராஜமந்திரியார் ஏகாம்பரம் தொண்டமனாரை நோக்கி

“மந்திரியாரே, நல்விழாவை தொடங்கும் முன் இந்த நிறைந்த

அவையில் நல்வேந்தர்களும், கற்றறிந்த மூத்தோரும் கூடிநிற்கும் கிடைத்தற்கரிய இவ்வினிய பொழுதில் என் நெடுநாள் சந்தேகத்தையும் தீர்த்துக்கொள்ளலாம் என திடீர்ப் பிரயத்தனம் கொள்கிறேன்." என்றான்.


"மாமன்னரே, தங்கள் நெடுநாள் சந்தேகம் இன்றே தீரும் என்பதில் ஐயமற்ற அவை இது. கூறுங்கள் வேந்தே!"

"கூறுகிறேன் மந்திரியாரே. இந்துமா கடலினிலே ஈழம் என புகழ் மிளிரும் நம் இராச்சியத்தின் கிரீடமாய் ஒளிவீசுகின்ற இந்த யாழ்ப்பாண தேசத்திற்கு இத்திவ்விய நாமம் எங்ஙனம் வாய்த்ததென்று தாங்கள் அறிவீர்களா மந்திரி?"

"மன்னிக்க வேண்டும் வேந்தே, அந்தக் காரணம் யானும் அறியிலேன். ஆயினும் கற்றறிந்தோர், மூத்தோர் கூடி நிறைந்துள்ள இவ் அவையினர் அறிந்திருப்பர் என்பதில் ஐயமில்லை அரசே, மன்னர்தம் சந்தேகத்தை புலவர் அவையினர் தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்"

என்று திருநெல்வேலிப் புலவர் அவையின் தலைமைப்புலவர் செண்பகமாப்பாணரை நோக்கிக் கூறினார் மந்திரி.

செண்பக மாப்பாணர் பணிவுடன் எழுந்து,



திவாகரன்

“தக்க பதிலை எம்புலவர்கள் அவையோர்க்கு அளிப்பார்கள் அரசே, நல்லோர் கூடிய இவ் அவை இன்று தெளிவு கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன்.”
என்று கூறி அமர்ந்தார்.

அப்போது புலவர் அவையிலிருந்து ஒரு புலவர் எழுந்தார்.
“அவை குழுமிய அரசினர்க்கு என் வணக்கம். நான் புலவர் சந்திரசேகர மாப்பாணன் ஆவேன். மாமன்னரின் மகத்தான கேள்விக்கு மரியாதைக்குரிய பதில் கூற விளைகிறேன்” என்றார்.

“கூறுங்கள் புலவர் சந்திரசேகர மாப்பாணரே, ஆவலாய் உள்ளேன்.” என்றார் சங்கிலிய மகாராஜா.

“வேந்தே, அக்காலச் சோழவளநாட்டில் இருந்து இரு கண்ணுங் குருடனாகிய கவிவீரராகவன் என்கிற யாழ்ப்பாணன்- நம் சிங்கை நகரிலிருந்து அரசாண்ட வால்சிங்க மகராசன் பேரில் யாழ் வாசித்துப் பிரபந்தம் பாடினான். அதைக்கேட்டு மனங்குளிர்ந்த வேந்தர் அவனுக்குப் பரிசிலாக தீவின் வடதிசையிலுள்ள மணற்றிடல் எனும் இந்நாட்டைக் கொடுத்தான். அந்த யாழ்ப்பாணனே இதற்குப் பெயரிட்டு யாழ்ப்பாணம் ஆக்கினான்.”

சந்திரசேகர மாப்பாணன் கூறிய கதையை எல்லோரும் அமைதியாகக் கேட்டிருந்தனர். அவ்வேளை அவையிலிருந்து இன்னொரு புலவர் எழுந்தார்.

“வேந்தே, நான் புலவர் கனகராயர். சந்திரசேகர மாப்பாணர் கூறுகின்ற கதையினை யாரும் அவ்வளவு வேகமாக நம்பி விடக்கூடாது அரசே, அந்த யாழ்பாடிக்கதை என்பதை வெறும் புனைந்துரை என்றே யான் கூறுவேன். இது போன்ற கதைகள் நம் புராணங்களில் மலிந்து கிடக்கின்றன. அப்படியொரு கதையினையே அந்தக் கவிவீர ராகவன் தலையில் கட்டி வைத்திருக்கினர். உண்மையில் அப்படி ஒருவன் இருக்கவுமில்லை. யாழ்ப்பாணம் பரிசிலாக ஒருவருக்குக் கொடுக்கப்படவுமில்லை.”

என்று உறுதியாகக் கூறிய புலவர் கனகராயரை நோக்கி சந்திரசேகர மாப்பாணர் கோபமிகுதியில் கேட்டார்.

“அப்படி இவை புனைந்துரையாயின், யாழ்ப்பாணம் எனும் திருநாமத்திற்கு தாம் கூற வரும் காரணம் என்னவோ?”

“கூறுகிறேன் புலவரே , பொறுமையாய்க் கேளுங்கள்.” என்றவாறு மன்னரை நோக்கி,

“அரசே, நான் கூறும் காரணம் ஏற்பதற்குச் சிரமம் என்றாலும் அதுவே உண்மை என்பதை நாம் உணர்ந்தாகத்தான் வேண்டும்.” என்றார்.

அரசவையின் அத்தனை கண்களும் புதிர் போடும் புலவர் கனகராயரை மொய்த்தன.

***புதிர் அவிழும்....***

# குழந்தைகளில் ஏற்படும் இரும்புச்சத்து குறைபாடு

## ( Iron deficiency in Children )

வைத்தியர் கணேஷ்

இரும்பு என்கின்ற கனிப்பொருளானது எமது இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் (Hemoglobin) மற்றும் தசையில் உள்ள மயோகுளோபினில் (Myoglobin) உள்ள பிரதான கூறாகும்.

மேலும் இரும்பு எமது உடலில் உள்ள பல நொதியங்களின் தொழிற்பாட்டுக்கும், DNA தொகுப்பிற்கும் மற்றும் சக்தி உற்பத்திக்கும் அவசியமானதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அதிகமான சிறுவர்களில் இரும்புச்சத்து குறைபாடு காணப்படுகின்றது.

### இரும்புச்சத்து குறைபாட்டிற்கான பிரதான காரணங்கள்

1. இரும்புச் சத்துள்ள உணவுகளை குறைவாக உட்கொள்ளுதல்

2. சில நோய்கள் காரணமாக இரும்புச் சத்துள்ள உணவுகளின் அகத்துறிஞ்சல் பாதிப்படைதல்

3. சில பூச்சி நோய்களால் மலத்துடன் குருதி வெளியேறுதல்

### இரும்புச்சத்து குறைபாட்டின் அறிகுறிகள்

1. மூளை வளர்ச்சி பாதிக்கப்படல்
2. கவனக்குறைவு
3. கணித்திறன் குறைதல்
4. சமூக-உள ரீதியான பாதிப்புக்கள்
5. உடற்பயிற்சி திறன் குறைதல்
6. கரி, கற்கள், மண் போன்ற உண்ணத்தகாத பொருள்களை உண்ணுதல்
7. நுண்ணுயிர்களை கொல்லும் திறன் குறைதல் (Immune system functional defects)
8. மூளையில் உள்ள நாளங்களில் இரத்தம் கட்டிபடும் தன்மை
9. குருதிச்சோகை - களைப்பு, மூச்சு விடுதலில் சிரமம், மயக்கம் போன்ற அறிகுறிகள்




## இரத்த பரிசோதனைகள் (Full blood Count)

1. Full blood Count மூலம் ஈமோகுளோபினின் அளவு, செங்குருதிச் சிறுதுணிக்கையின் பருமன், செங்குருதிச் சிறு துணிக்கையில் உள்ள ஈமோகுளோபினின் செறிவு என்பவற்றை பார்க்கலாம்.

2. Serum Ferritin - இரத்தத்தில் உள்ள இரும்புத் துணிக்கைகளின் அளவு.

## சிகிச்சை முறைகள்

- ☐ சரியான இரும்புச்சத்துள்ள உணவுகளை உண்ணுதல். முக்கியமாக கீரை வகைகள், கோழிஇறைச்சி, ஆட்டு இறைச்சி, மீன் போன்ற உணவுகளை உட்கொள்ளுதல். அவ்வாறு உண்ணும் போது தேசிப்புளி சேர்த்து உண்ணுதல்.
- ☐ உணவுடன் சேர்த்து தேனீர் அருந்துவதைத் தவிர்த்தல்
- ☐ சிறார்களுக்கு கிரமமாக பூச்சி மருந்தளித்தல்
- ☐ இரும்புச்சத்து மருந்து syrub ஆக கொடுக்கலாம். Orofer மற்றும் Mumfer என இருவகையான திரவ இரும்பு பாவிக்கப்படுகின்றது.
- ☐ கடுமையான இரத்தச்சோகையுடன் கூடிய இருதயப் பாதிப்பு ஏற்படுமிடத்து இரத்தம் ஏற்றப்பட வேண்டி ஏற்படும்.



---

**வேகம் விவேகமல்ல!!!**

*யாரில் சரி ?*
*யாரில் பிழை ?*
*கதை முடிந்த பின்*
*கதைத்துப் பயனில்லை!*
*வீதிப் பயணத்திலும்*
*வாழ்க்கைப் பயணம் நீண்டது!*






# புதிர் 10
# யார் சேனாதிபதி?

சினமிகா

விக்ரமாதித்தன் சரியான பதிலினால் அவனது மௌனம் கலையவே வேதாளம் தான் புகுந்திருந்த உடலுடன் மீண்டும் பறந்து போய் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்ரமாதித்தன் மீண்டும் மரத்தின் மீதேறி அதில் தொங்கிய உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி, அவன் அதைத் தூக்கிக்கொண்டு செல்லும் போது, அதனுள்ளிருந்த வேதாளம்,

"மன்னா! எந்த இலட்சியத்தை நாடி, இவ்வாறு நடு இரவில் மயானத்தில் என்னை சுமந்து கொண்டு திரிகிறாய் என்பது எனக்குத் தெரியவில்லை. சில சமயங்களில் அறிவில் சிறந்தவர்கள் என்று நாம் கருதும் சிலரது ஆலோசனைகள் நம்மைத் தவறான பாதையில் அழைத்துச் செல்லக் கூடும்! அவ்வாறு அறிவிற்சிறந்தவர் என்று தான் கருதிய மந்திரியின் சொல் கேட்டு, தவறிழைத்த மன்னன் ஒருவனது கதையை உனக்குக் கூறுகிறேன்!" என்று சொல்லிவிட்டு, தன் கதையைத் தொடங்கியது.

மகிபாலன் என்ற மன்னன் தனது முதல் மந்திரியான தர்மசீலரின் ஆலோசனைப்படி ஆட்சி செலுத்தி வந்தான். ஒரு சமயம் அவனுடைய சேனாதிபதி திடீரென இறந்து போக புதிய சேனாதிபதியை நியமிக்கும் பொறுப்பை மகிபாலன் தர்மசீலரிடம் ஒப்படைத்தான்.

உடனே தர்மசீலரும் நாடெங்கிலும் உள்ள பல வீர இளைஞர்களைத் தலைநகரத்திற்கு வந்து வாட்போர், வில் வித்தை, மல்யுத்தம், படைகளை இயக்கும் ஆற்றல், யுத்தத் தந்திரங்கள் ஆகியவற்றில் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த அழைத்தார். அந்த அறிவிப்பின்படி ஏராளமான வீரர்கள் தலைநகரில் கூடினர். ஒவ்வொரு நாளும் பலருடைய திறமைகளையும் உன்னிப்பாக கவனித்த தர்மசீலர் இறுதியில் ரூபசேனன், பராக்கிரமன் ஆகிய இருவரைத் தேர்வு செய்தார்.



$$1 + 2 + 3 + 4 + 5 + 6 + 7 + 8 + 9 = 45$$

இருவருமே அனைத்து கலைகளிலும் சமமாக இருந்தனர். அதனால் இருவரில் ஒருவரை மட்டும் தேர்ந்து எடுப்பதில் தர்மசீலருக்கு சிரமம் ஏற்பட்டது. அவர்களை நேரிலே அழைத்த மந்திரி,

“நீங்கள் இருவரும் அனைத்து கலைகளிலும் சரிசமமாக இருக்கிறீர்கள். சோதிக்கப்பட வேண்டிய சில குணங்கள் இன்னும் சில உள்ளன. அவற்றை சோதிக்க, நான் உங்களிடம் சபையில் எல்லோர் முன்னிலையிலும் மூன்று கேள்விகள் கேட்பேன். அவற்றிற்கு நீங்கள் அளிக்கும் பதில்களைப் பொறுத்து உங்களில் ஒருவரைத் தேர்வு செய்வேன். சம்மதமா?” என்று கேட்டார். இருவரும் அதற்கு சம்மதித்தனர். அதன்படி, மறுநாள் இருவரும் சபைக்கு வந்தனர்.


அத்துடன் நிறுத்திய வேதாளம். விக்ரமாதித்தனே! நான் மந்திரியின் நிலையிலிருந்திருந்தால் அவர்களின் அறிவு மற்றும் விவேகத்திறனின் அடிப்படையில் சிறந்த சேனாதிபதியை தெரிவு செய்திருப்பேன் என கூறி புதிரொன்றை போட்டது.

இங்கே காட்டப்பட்டுள்ள இலக்க தொடரின் கூட்டுத்தொகை 45 ஆக காணப்படுகிறது. கூட்டல் குறியீடு ஒன்றினை பெருக்கல் குறியீடாக மாற்றி அடைப்புக் குறிக்குள் ஒரு தொகுப்பைச் சேர்ப்பதன் மூலம் இந்த இலக்கத் தொடரின் கூட்டுத்தொகையை 100 ஆக மாற்றலாம். குறுகிய நேரத்தில் இதை தீர்ப்பவரே அறிவு மற்றும் விவேகத்தில் சிறந்தவராக கருதப்படுவார். அவருக்கே நான் சேனாதிபதி பதவி அளித்திருப்பேன்.

விக்ரமாதித்தனே நீர் கூட விவேகத்தில் சிறந்தவராயிற்றே இதற்கான பதிலை கண்டுபிடியும் பார்க்கலாம். நீர் மௌனமாக இருந்தால் உம் தலை வெடித்து சுக்குநூறாகும் என்று முடித்தது வேதாளம்.

துமி அன்பர்களே! வழமை போல் நீங்களும் விக்ரமாதித்தனுக்கு உதவிடுங்கள்.


புதிர் 09 - விடைகள்



## தாயுமானவரின்...

# சமய சமரசம்

பிரசாந்தி ஜெயபாலன்



சமரச ஞானப் பாதுகாவலர்களில் ஒருவராகவும் சமரச உணர்வை வளர்த்த ஞானத் தாய்மார்களில் ஒருவராகவும் அறியப்படும் தாயுமான சுவாமிகள் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவராக இனங்காணப்படும் இலக்கிய கர்த்தா ஆவார்.

திருமறைக்காட்டில் சைவ வேளாளர் குலத்தில் கேடிலியப்பபிள்ளையின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். வடமொழி, தென்மொழி இரண்டிலுமே பாண்டித்தியம் மிகுந்த இவர் மௌனகுரு சுவாமிகளிடம் அறிவுரை பெற்றார். தந்தையார் இறந்தவுடன் அரசவேலையில் அமர்ந்த இவர் பின்னர் யோகஞானங்களில் சிறக்கத் துறவு பூண்டார். சைவ சித்தாந்தம், அத்வைதம் ஆகிய இரு நிலைக்கும் ஒருவகை சமரசம் கண்டவர். “உபநிடதக் கருத்துக்களையும் மற்ற ஞானநூல்களின் உட்பொருளையும் மிகத்தெளிவாகத் தமிழில் பாடியவர்” என பேரா.மு.வரதராசன் இவரைப் பாராட்டுகின்றார்.

“தமிழ்மொழியின் உபநிடதம்” என சிறப்பிக்கப்பெறும் இவரது பாடல்களினூடே புலப்படும் சமய சமரச சிந்தனைகளை,

1. அனைத்து சமயங்களையும் ஒன்றாக நோக்கியவர்
2. கடவுள் ஒருவரே என்ற எண்ணமுடையவர்
3. மதப்பாகுபாட்டால் கடவுளை அடைய முடியாது என்ற கருத்துடையவர்
4. மதங்களுக்கிடையேயான முரண்பாடுகளைக் கண்டித்தவர்
5. சில சமயங்களின் சிறப்புக்களை உரைத்தவர்
6. நாத்திகத்தை மறுத்தவர்

என்கின்ற அடிப்படையில் இங்கு நோக்கலாம்.

இத்தகைய சமரச எண்ணம் இவருக்குள் ஊற்றெடுப்பதற்கான பின்னணி என்னும்போது, சங்கரர் காலம் முதல் வேதாந்தமும் சித்தாந்தமும் தமிழ்நாட்டில் பரவி வந்திருக்கின்றன. சித்தாந்தம் சைவசித்தாந்தமாகவும் வைணவ

சித்தாந்தமாகவும் பரவி வந்திருக்கிறது. வேதாந்திகள் இந்த இரண்டு சித்தாந்தங்களையும் சமரசப்படுத்த முயன்றுள்ளனர். இவ்வகைச் சமரச முயற்சியில் சித்தர்கள் பெரும்பாலும் ஈடுபட்டிருந்ததாகத் தாயுமானவர் கூறுகிறார். எனவே சித்தர்களின் இச்சமரசநெறி மௌனகுரு சுவாமிகள் வாயிலாக இவருக்கு வாய்த்ததாக நாம் கருதலாம்.

இவ்விதமாக "சமரச ஞான அருள் விளக்கு" என சிறப்பிக்கப்படும் இவர் சமயங்களின் பொதுநோக்கையும் சமய வாதத்தால் வரும் இடர்பாடுகளையும் பல இடங்களில் வெளிப்படுத்துவதோடு அறுவகைச் சமயத்தின் இயல்பையும் சைவத்தின் சிறப்பினையும் சித்தாந்தத்தின் பெருமையினையும் விளக்குகின்றார். சமயங்கள் எல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருளையும் மக்கள் அடைவதற்குரிய பல வழிகளாக அமைந்தவை. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிலையில் உள்ளவர்களுக்குப் பயன்படும்



வண்ணம் இறைவன் அவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப உண்மையை உணர்த்துவார். எனினும் தத்தம் சமயநலனை மாத்திரம் நன்கு உணர்ந்தவர்கள் அவ்வச்சமயத்தை நிலைநாட்டுவதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இறைவனே காரணம் என்கிறார். இதனை,

"அமையாக் காதலிற் சமயகோடி
அறம் பொருள் ஆதி திறம்படு
நிலையிற்..."

எனத் தொடரும் அகவலினால் உணரலாம். இவரது பாடற்திரட்டின் முதற்பாடலே சமரச ஞானத்தை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது,

"அங்கிங்கு எனாதபடி
ஏங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது?"

என்பதில் இவரது சமரச வாதத்தைக் கண்டுணரலாம். எங்கும் உள்ள பரம்பொருளை அஞ்சலி செய்ய வேற்றுமை கருதாது அனைவரையும் கூவியழைத்து

"கருதி அஞ்சலி செய்குவாம்"

எனத்தொடரும் திருப்பாடற் திரட்டு இத்தகைய சமரசக் கருத்துக்கள் நிறைந்த ஒரு பொக்கிசமாகக் காணப்படுகின்றது.

தொடரும்....

கப்பச்சீனோ கதைகள்

2

# தோற்றுவிட்டேன்....

தொண்டரடிப்பொடியன்

மூத்தவனின் திருமணம் மூலம் இந்த சமூகம் நிறைய கற்றுத் தந்தது. பட்டம் பதவி படிப்பு பணம் தராத கௌரவத்தையும் மரியாதையையும் சாதி தருமென்று நன்றாகப் புரிந்து கொண்டோம். இழந்தவற்றை மீளவும் பெற வேண்டுமென்றால் நாங்களும் சமூகத்தோடு சமூகமாக கலக்க வேண்டும். அதற்கு என் இளைய மகன் திருமணம்தான் ஒரே வழி!

பண்டைய காலங்களில் இராச்சிய உறவுகளை பலப்படுத்த அரசர்கள் திருமண உறவுகளை பயன்படுத்தியதைப்போல நானும் செய்ய வேண்டும். ஆனால் மூத்தவன் பாதையிலேயே பயணிக்கும் இளையவனும் காதல் கொண்டுவிட்டால்....? அந்த பெண்ணும் தாழ் சாதியாகி விட்டால்...? மீட்சியே இல்லை! அடுத்த பிள்ளையையாவது கட்டி வைக்கலாமென்றால் எனக்கு வேறு பிள்ளையும் இல்லை! ஆகவே, எனக்கு வேறு வழியே இல்லை. என் இறுதி துருப்புச்சீட்டு இளையவன் தான்!

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சாதியால் நாங்கள் படுகிற துன்பத்தையும் அதிலிருந்து மீள சாதிக்குள்ளேயே திருமணம் செய்ய வேண்டிய கட்டாயத்தையும் அவனுக்கு அடிக்கடி சொல்லி வந்தேன். அண்ணன் போல நீ போகக் கூடாதென்று சத்திய வாக்கையும் அவனிடமிருந்து வாங்கினேன். அவனது படிப்பு முடியும் காலத்தை அவனை விட நானே அதிகம் எதிர்பார்த்தேன். படிப்பு முடிந்தவுடன் அவனுக்கு திருமணம் செய்து வைத்து விட வேண்டும். நாங்கள் இழந்த கௌரவத்தையும் மரியாதையையும் மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அவனுக்கு இறுதி வருட பரீட்சை நடந்து கொண்டிருந்தது. என் மனைவி வழி சொந்தத்தில் நல்ல வரன் வந்திருந்தது. சாதகப் பொருத்தம் சாதகமாகவே இருந்ததால் அவனிடம் சம்மதம் கேட்டேன். அழுது விட்டான். கண்ணீரோடு சேர்ந்தே அவன் காதலையும் கொட்டித்தீர்த்தான். அதிர்ந்து விட்டேன். எது நடக்கக்கூடாதென்று நினைத்தேனோ அது நடந்துவிட்டது. அண்ணனைப் போலவே இவனும் பல்கலைக் கழகத்தில் ஒருத்தியை காதலித்து



விட்டாள். அதுவும் வழமைபோல தாழ் சாதியில்....!

இந்த முறை நான் இளகிப் போகவோ, இரங்கிப் போகவோ சந்தர்ப்பமே இல்லை. உறுதியாக இருந்தேன். வந்த வரனையே பேசி முடிக்க முழுவதும் முயன்றேன். பிள்ளை தோளுக்கு மேல் வளர்ந்தால் அடிக்கக்கூடாது என்பார்கள். இவன் தலைக்கு மேலேயே வளர்ந்துவிட்டான். அடிக்கலாம். தப்பில்லை. அடித்தேன். தீரும் வரை திட்டினேன். அழுதான். விம்மி விம்மி அழுதான். சில நாட்களாக மரண வீடு போல அழுகுரல்கள் அடிக்கடி கேட்க எல்லோர் முகங்களும் இறுக்கமாக இருந்தன. சிரிப்பைத் தொலைத்து சில நாட்களாகி விட்டன.

என்ன நடந்தும் அவன் காதலைக் கைவிடத் தயாரில்லை. தன் காதலை நியாயப்படுத்தவும் புனிதப்படுத்தவும் என்னென்னவோ சொன்னான். எதையும் நான் காதில் வாங்கவே தயாரில்லை. அண்ணன் வழியில் பாரதியை துணைக்கு அழைத்தான். எதிர்பார்த்தது தான்.

”நாட்டுக்காக வாழ்ந்த பாரதியைத் தான் உன் தகப்பனுக்கு பிடிக்கும். அவன் செத்த போது எவனும் எட்டிப்பார்க்கவில்லை. குடும்பத் தலைவனாக பாரதி தோற்றவன். தோற்றவனை எனக்கு பிடிக்காது. உன் தகப்பனுக்கு முன் வாய் பொத்தி கை கட்டி நின்றவன் எல்லாம் இப்ப எனக்கு வாய் காட்டும் நிலைக்கு உன் அண்ணன் என்னை ஆக்கி விட்டான். அண்ணனால் நான் இழந்தவற்றை நீ தான் எனக்கு பெற்றுத் தர வேண்டும். அப்படி இல்லை என்றால் எனக்கு கொஞ்சம் விசத்தை வாங்கித்தா! குடித்துவிட்டு செத்து விடுகிறேன். மானம் கெட்டு வாழ்வதை விட செத்துப் போவது மேல்!” அவனை என் வழிக்கு கொண்டு வர என்னென்னவெல்லாம் செய்ய முடியுமோ, சொல்ல முடியுமோ அவ்வளவும் செய்தேன். இதற்கு முதல் அவனை நான் இப்படி அடித்தது இல்லை. அது அவனுக்கும் புரிந்திருக்க வேண்டும். அமைதியாய் நின்றான். ஆனால் அழுதான்.

இது தான் சந்தர்ப்பம் என்று சத்திய வாக்கு ஒன்றை வாங்கினேன். காதலைக் கைவிடும் படியும், என் கனவை நினைவாக்குமாறும் சத்தியத்தை செய்ய வற்புறுத்தினேன். செய்தான். தசரதன், அரிச்சந்திரன் என சத்தியத்தால் சங்கடத்துக்கு உள்ளானோர் பலர். சூழ்ச்சி தான் செய்கிறேன். அப்பா என்கிற பதவியை ,உரிமையை, கடமையை துஷ்பிரயோகம் செய்தே இவற்றை சாதித்தேன். வேறு வழி எனக்கு தெரியவில்லை.

அன்றிலிருந்து அவன் அவளுடன் கதைக்கவில்லை. ஆனால் அவன் அவனாக இல்லை. காலம் மாற்றும் என்கிற நம்பிக்கையில் கல்யாணப் பேச்சுக்களை முன்னகர்த்தினேன். சொந்தத்திற்குள் நல்ல வரன்

ஒன்று அமைந்தது. அவனிடம் சம்மதம் கேட்டேன். பதிலின்றி நின்றான். காலம் மாற்றும் என்ற நம்பிக்கையில் நிச்சயதார்த்தத்திற்கு நாள் பார்க்கப்பட்டது. என்னை அவமானப்படுத்திய சொந்தங்கள் வீடுகளுக்கு எல்லாம் பல நாட்களின் பின் நிச்சயதார்த்தத்திற்கு அழைக்கவென நேரில் சென்றேன். சில வீடுகளில் மீண்டும் அவமானம்தான் பரிசானது. சந்தனத்தை தடவினாலும் பூசிய சேற்றின் நாற்றத்தை மறைக்க முடியாதென்று வெளிப்படையாகவே கூறினார்கள்.

வெறுத்துப் போனேன். இந்த சமுதாயம் என்றுமே மாறாது. என்னை ஓரங்கட்ட முடிவெடுத்துவிட்டவர்கள் கையில் எடுத்த ஆயுதம் சாதி! இனி எங்கும் அவர்களிடம் எனக்கு அங்கீகாரம் கிடைக்காது. ஒரு நிமிடம்! எனக்கு அங்கீகாரம் தர யார் அவர்கள்? அவர்களுக்காக என் கொள்கைகளை இழந்து, பாரதி மீதான பற்றை இழந்து, மகனிடம் பாசத்தை இழந்தென்று நான் என்னையே முற்று முழுதாக



இழந்துவிட்டேன். என்ன பயன்? ஏற்றார்களா என்னை?

உடனிருக்காத உறவுகளுக்காக கொண்ட கொள்கையில் உறுதியாக இராமல் சாதிக்கு தலை சாய்த்த போது மனிதனாக தோற்றுவிட்டேன்.

இன்னும் சில வருடங்களே எனக்கான வாழ்க்கை! ஆனால் என் மகனுக்கு நீண்ட வாழ்க்கை காத்திருக்கிறது. என் சுயநலத்திற்காக தன் காதலையே தியாகம் செய்து நான் காட்டியவளை கல்யாணம் பண்ண சம்மதித்த அவன் மகனாக வென்று விட்டான். ஆனால் பாசத்தை வைத்து மிரட்டிய நான் தந்தையாக தோற்றல்லவா விட்டேன்.

தந்தையாகவாவது நான் வெல்லாவிட்டாலும் காதலனாக என் மகன் வெல்ல வேண்டும். அவனை நம்பி அவனிடம் மனதைப் பறிகொடுத்தவளை அவன் ஏமாற்றியதாக இருக்கக் கூடாது. அவனைப் பெற்ற தந்தையாகவே இருந்தாலும் அவனது தனிப்பட்ட வாழ்க்கையில் ஓரளவுக்கு மேல் நான் தலையிடக் கூடாது.

முடிவெடுத்து விட்டேன்... நான் தோற்றது தோற்றதாகவே இருக்கட்டும். என் மகன் வெல்ல வேண்டும். அது தான் காதலின் வெற்றி! பாரதியின் வெற்றி!

இப்படிக்கு,
அப்பா

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில்

# கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்

முருகையா சதீஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

5

## கதைப்பின்னல்

நாவலில் பிரச்சாரத் தொனியின்றிக் கருத்துக்களை முன்வைப்பதை ராஜமய்யர் அறிந்திருக்கிறார். கல்யாணியின் திருமணம், நடராஜனின் பிறப்பு, பேயாண்டித் தேவனின் திருட்டு, முத்துஸ்வாமி ஐயரின் குடும்பச்சிதைவு, சுப்பிரமணிய ஐயரின் இறப்பு எனக் கதையோட்டம் விறுவிறுப்படைகின்றது. இறுதியில் பிரிந்த குடும்பம் காசியில் ஒன்று சேர்வதும், தவறான வழியில் சென்றவர்கள் திருந்துவதும் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கதைப்பின்னல் இறுக்கமாகவும், யதார்த்தபூர்வமாகவும், தருக்க முறைப்படியும் அமைந்திருக்கின்றது.

## யதார்த்த நெறி

கதையோட்டத்தின் படி ஆரம்பத்தில் யதார்த்த பூர்வமான சமூக அமைப்பு முத்துஸ்வாமி ஐயரின் இல்லற வாழ்வினூடாகக் காட்சிப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக, அக்காலத்து நிலமானிய சமூக நடைமுறைகளையும், நிலமானிய சமூகத்தில் கூட்டுக்குடும்பங்கள் சிதைந்து போகின்ற நிலையையும் இந்நாவலில் பார்க்க முடியும். அதுமட்டுமன்றி அக்காலப் பெண்களின் மனப்போக்கு, அக்காலச் சமூகநிலை, குடும்பங்களின் பிரச்சினைகள், உறவுச் சிக்கல்கள், பிள்ளை வளர்ப்பு முதலான பல்வேறு விடயங்களை உணர்த்துவதற்கு யதார்த்த நெறி ராஜமய்யரால் கையாளப்பட்டுள்ளது. மேலும், யதார்த்த வாதத்தின் மையக்கூறாக உள்ளதும், அதன் அடித்தளமாக உள்ளதும் வகை மாதிரியான பாத்திரங்களே ஆகும். குறிப்பிட்ட சமூகத்தை பெருமளவிற்குப் பிரதிபலிக்கத்தக்க வகையில் பொதுப்பண்புகளுடன் காணப்படுவதே வகைமாதிரியான பாத்திரமாகும்.

அம்மையப்பிள்ளை ஆங்கில ஆட்சிச் சூழலில் செல்வாக்கு இழந்து போன தமிழாசிரியர்களின் வகைமாதிரியான பாத்திரம். அம்மையப்பிள்ளையின் தனித்துவம் அவர்காலத்துப் பொதுப்பண்புகளுடன் கலக்கும் போது அப்பாத்திரம் யதார்த்தமாக மாறுகிறது. கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் மாயாண்டித் தேவனையும், கல்கியின் கள்வனின் காதலியில் வருகின்ற கள்வனையும் ஒப்பிடும் போது ராஜமய்யர் யதார்த்த வாதி. ஆனால் கல்கி புனைவியல் வாதி. மாயாண்டித்தேவன் அக்காலத்து நிலப்பிரபுத்துவ சமூகத்தில் உள்ள வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் வகைமாதிரியான பாத்திரமாக உள்ளான். ஒரு படைப்பாளி வெகு

இயல்பாக சமூகமாறுதல்களையும், முரண்பாடுகளையும், சித்திரிப்பது சுபாவ யதார்த்த வாதமாகும். ராஜமய்யர், மாதவையா முதலான ஆரம்பகாலப் படைப்பாளிகளிடம் இத்தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுவதுடன் நின்று விடுகின்றனர். பாத்திரங்களின் இயக்கம் படைப்பாளிகள் வாழ்ந்த காலத்து சமூக இயக்கங்களின் பிரதிபலிப்பாகும்.




### ராஜமய்யர் குறைந்த வயதில், உருவம் சிறப்பாக அமைய எழுதிய நாவல்

தன் பிரதாப முதலியார் சரித்திரத்தை வசன காவியம் என்று வேதநாயகம் பிள்ளை கூறினார். கமலாம்பாள் சரித்திரமும் ஒரு மகோன்னதமான வசனகாவியம் என்றுதான் சொல்ல வேண்டும். வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திர நாவலின் கட்டுக்கோப்பு ஒருவிதத்திலும் அடங்கவில்லை. கமலாம்பாள் சரித்திரத்திலே நாவல் உருவம் அற்புதமாக அமைந்து விட்டது. இருபத்தாறே வருடங்கள் உயிர் வாழ்ந்த ராஜமய்யர் எழுதிய இந்த நாவல் இப்படி ஒரு நாவலாக அமைந்து விட்டதைத் தமிழர்களின் அதிஷ்டம் என்றே கூறலாம். நாவல் இலக்கியத்தின் வரலாற்று வளத்திற்கு ராஜமய்யர் அத்திவாரம் போட்டுத்தந்துவிட்டார். என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

### பிராமணப் பேச்சுத்தமிழ்

ஆரம்பகால நாவல்களில் பிரதேச, சமூகப்பேச்சு வழக்கினைக் கொண்டுவந்து பேசுவது சற்று கடினமான விடயமாகும். ஆனாலும் ராஜமய்யர் கமலாம்பாள் சரித்தி ரத்தில் மதுரைப் பிராமணப் பேச்சு வழக்கினைக் கையாண்டுள்ளார். "எங்களாத்தில் தீர்த்தம் கொடுக்கிற வழக்கமில்லை" என்பதன் மூலமும் வடமொழிச் சொல்லாட்சி பரவலாகக் கையாளப்பட்ட தன்மையினையும் அவதானிக்கலாம். உதாரணமாக, "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" , "ஸரபோஜீ" முதலான சொற்களைக் கூறலாம்.

### ராஜமய்யரின் கவிதை உள்ளம்

ராஜமய்யர் வாழ்வியலின் கூறுகளைச் சற்று உயர்த்தி, தம் சிந்தனையின் கவர்ச்சியை ஏற்றியே அவர் கூறுகின்றார். முதல் பகுதியில் கமலாம்பாள்- முத்துஸ்வாமி ஐயர் தம்பதியின் உரையாடலில் இருந்து, வம்பர் மகாசபை, வித்துவான் அம்மையப்பிள்ளை, பேயாண்டித்தேவன், கடலைப் பார்த்து கவிதையாய் நெகிழ்தல் என்று கதையினை, தம் பார்வை எல்லைக்குள்ளே இயக்கிச் செல்கின்றார். அதனாலேயே பாத்திரங்கள் அழியாத்தன்மையும் வாசகனிடம் ஆசிரியரின் எழுத்துப் பற்றிய பிரமிப்பும் ஏற்படுகின்றன. பின் பகுதியில் வரும் அடுக்கடுக்கான திருப்பங்களும் அவரது எழுத்தின் கவர்ச்சியை நம்பியே வரையப்பட்டவையாக அறியலாம்.

ஆய்வு தொடரும்...

# நானும் ஒரு சாக்கடை தான்!.....

வானளவு சந்தோசமும்
முடிவில்லா அரவணைப்புக்களும்
அருகிருக்க
கவலைகளை மட்டும்
சேர்த்துவைக்கும் என் மனமும்
ஒரு சாக்கடை தான்!

தேற்றுகின்ற நண்பர்களும்
தோள்கொடுக்கும் தோழர்களும்
அருகிருக்க
துரோகங்களை மட்டும்
எண்ணிக்கொண்டிருக்கும்
என் நினைவுகளும்
ஒரு சாக்கடை தான்!

நல்வழிப்படுத்தும் நற்சிந்தனைகளும்
நற்பழக்கம் புகட்டும் பெரியார்களும்
அருகிருக்க
கெட்டவைகளை மட்டும்
சிந்திக்கின்ற என் சிந்தனைகளும்
ஒரு சாக்கடை தான்!

தட்டிக்கொடுக்க ஆசான்களும்
உயர்த்தி அழகுபார்க்க
பெற்றோர்களும் அருகிருக்க
தோல்விகள் கண்டு
துவண்டு போகும் என் பயங்களும்
ஒரு சாக்கடை தான்!

கட்டி அனைத்திட குடும்பமும்
கண்ணீர் துடைத்திட உறவுகளும்
அருகிருக்க
இல்லாத அன்பிற்காக
ஏங்கும் என் மனஏக்கமும்
ஒரு சாக்கடை தான்!

மூவேளை உண்ணும் உணவும்
தங்கியிருக்க உறைவிடமும்
இருந்தும்
அடுத்தவன் நிலைகண்டு
பொறாமை கொள்ளும் என்மனமும்
ஒரு சாக்கடை தான்!


தளராத தன்னம்பிக்கையும்
இடைவிடாத விடாமுயற்சியும்
என்னுள் இருக்க
உழைக்க மறுக்கின்ற
என் சோம்பேறித்தனமும்
ஒரு சாக்கடை தான்!

வலிகள் தாங்கும் பொறுமையும்
எதையும் தாங்கும் இதயமும்
என்னோடு இருக்க....
முடியாது எனும்
போர்வையில் வரும்
கோபமும் அழுகையும்
ஒரு சாக்கடை தான்!

இறுதியில்....

இருப்பது அனைத்தையும்
மறந்துவிட்டு
இல்லாத ஒன்றுக்காக அலையும்
மனித மனங்களில்
என் மனமும்
விதிவிலக்கா என்ன?
நானும் ஒரு சாக்கடை தான்

லிரோ





# 2 முதலாளித்துவம்

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

## முதலாளித்துவ வகைகள்

1. விவசாய முதலாளித்துவம்
2. வியாபாரத்துவம்
3. தொழிற்துறை முதலாளித்துவம்
4. நவீன முதலாளித்துவம்

## விவசாய முதலாளித்துவம்

நிலப்பிரபு விவசாய முறையின் பொருளாதார அத்திவாரங்கள் 16 ஆம் நூற்றாண்டு இங்கிலாந்தில் கணிசமான மாற்றம் தொடங்கியது. புனரமைப்பு முறை உடைந்து விட்டது, பெருமளவிலான நிலப்பகுதிகளைக் கொண்ட நிலப்பகுதிகளில் நிலமானது செறிவூட்டப்பட்டது.

**ஒரு அடிமை - அடிப்படையிலான உழைப்பு முறைக்கு பதிலாக, பரந்த மற்றும் விரிவடைந்த பண அடிப்படையிலான பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக தொழிலாளர்கள் பெருகிய முறையில் பணியாற்றினர்.**

இலாபம் சம்பாதிப்பதற்காக வேளாண் உற்பத்தியை அதிகரிக்க இந்த முறை மூலமாக நில உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களிடையே அழுத்தம் கொடுக்கப்பட்டது. விவசாய உபகாரங்களைப் பிரித்தெடுக்க பிரபுத்துவத்தின் பலவீனமான வலிமையின் சக்தி அவர்களுக்கு சிறந்த வழிமுறைகளைத் தேடுவதற்கு உற்சாகப்படுத்தியது, மேலும் போட்டித் தொழிலாளர் சந்தையில் வளரும் பொருட்டு குடியிருப்பாளர்கள் தங்கள் முறைகளை மேம்படுத்துவதற்கு ஊக்கமளித்தனர்.

நிலத்திற்கான வாடகை நிபந்தனைகள், முந்தைய சந்தை தேவைகள் மற்றும் நிலப்பிரபுத்துவ கடமைகளை விட பொருளாதார சந்தை சக்திகளுக்கு உட்பட்டன.

17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், மத்திய கிழக்கு ஐரோப்பாவின் நிலப்பிரபுத்துவ ஒழுங்கின் பெரும்பகுதி வெட்டப்பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட மாநிலமாக இருந்தது.

இந்த மையமயமாக்கல் நல்ல சாலைகள் மற்றும் ஒரு பெரிய அளவிலான மூலதன நகரமான லண்டன் மூலம் பலப்படுத்தப்பட்டது.



மூலதனம் முழு நாட்டிற்கும் மைய சந்தை மையமாக செயல்பட்டு, பொருட்களுக்கு ஒரு மிகப்பெரிய உள்சந்தையை உருவாக்கி, கண்டத்தின் பெரும்பகுதிகளில் நிலவிய பிளவுபட்ட நிலப்பிரபுத்துவ சொத்துக்களுடன் முரண்பட்டது.

### வியாபாரத்துவம்

**16 முதல் 18 ஆம் நூற்றாண்டுகளில் நிலவும் பொருளாதார கோட்பாடு பொதுவாக வணிகவாதம் என அழைக்கப்படுகிறது.**

இந்த காலம், கண்டுபிடிப்பின் யுகம், வர்த்தக வணிகர்கள், குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து மற்றும் குறைந்த நாடுகளில் இருந்து வெளிநாட்டு நிலங்களின் புவியியல் ஆய்வு தொடர்புடையதாக இருந்தது.

(Mercantilism) வியாபாரத்துவம் என்பது இலாபத்திற்கான வர்த்தக முறையாகும், இருப்பினும் பொருட்களும் இன்றியமையாத முதலாளித்துவ முறைகளால் உற்பத்தி செய்யப்பட்டன.

**பெரும்பாலான அறிஞர்கள் வணிக முதலாளித்துவ மற்றும்**




**வணிகவாதத்தின் சகாப்தத்தை நவீன முதலாளித்துவத்தின் தோற்றமாகக் கருதுகின்றனர்.**

என்றாலும், முதலாளித்துவத்தின் முத்திரை என்பது ”கற்பனையான பண்டங்கள்” என்று அழைக்கப்படும். உழைப்பு, பணம். அதன்படி 1834 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் நிறுவப்பட்ட ஒரு போட்டி தொழிலாளர் சந்தையாக இல்லை, எனவே ஒரு சமூக அமைப்பாக தொழில்துறை முதலாளித்துவம் அதற்கு முன்பே இருந்ததாக கூற முடியாது.



இந்த பத்தி தினமணியில் வெளிவந்த முதலாளித்துவம் எனும் கட்டுரையினை தழுவி மாற்றங்களுடன் இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

*சாரல் தூறும்...............!!!!!*

# ஈழச் சூழலியல் 18

## இரசாயனப் பசளை இறக்குமதித் தடையும் இயற்கை உரப்பாவனையும்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

எமது அடுத்த தலைமுறைக்கு இரசாயன கலப்படமற்ற உணவுகளை வழங்க வேண்டும் என்ற உறுதியான சிந்தனை நாட்டு மக்கள் அனைவருக்கும் உள்ளது. அதை மறுப்பதற்கில்லை. எனினும் எந்தவித தயார்ப்படுத்தல்களும் இல்லாத இந்த திடீர் அறிவிப்பு பலருக்கு திகைப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக களை நாசினிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அடுத்த 15 நாட்களுக்கு மட்டுமே தம்மிடம் பொருட்கள் கைவசம் உள்ளதாகவும் வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இரசாயன களை நாசினிகளுக்காக எமது நாடு வருடந்தோறும் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவளிக்கின்றது என்கிறார் ஜனாதிபதி. அது உண்மையும் கூட. ஆனால் இரசாயன உரங்களுக்கு மாற்றீடான இயற்கை உரங்கள் தயார் நிலையில் இல்லை என்பதையும் சிந்திக்க வேண்டும். மட்டுமன்றி எமது நாட்டில் காய்கறி, பழ உற்பத்திக்கு மட்டுமின்றி பெருந்தோட்ட




பயிர்களான தேயிலை, இறப்பர், தென்னைக்கும் இரசாயன களை நாசினிகளே பாவிக்கப்படுகின்றன. இவற்றுக்கு மாற்றீடாக உடனடியாக வேறு எதையும் பயன்படுத்த முடியாத சவால்களே உள்ளன.

மிக முக்கியமாக எமது நாட்டில் பயன்படுத்தப்படும் கலப்பின விதைகள் இரசாயன உரங்களுக்கு ஈடு கொடுப்பதற்கேற்ப கண்டு பிடிக்கப்பட்டவையாகும். அடுத்த 3 வருடத்துக்குள் இரசாயன உர பயன்பாட்டை 30 வீதமாக குறைப்பதற்கும் அதற்குப்பதிலாக இயற்கை உரங்களை தயாரிக் கும் நிறுவனங்களுக்கு சலுகை களை வழங்குவதற்கும் ஆலோசித் திருப்பதாக விவசாய அமைச்சு கூறுகின்றது. இதன் காரணமாகவே சுமார் 18 ஆயிரம் தொன் இரசாயன உரவகைகளை ஏற்றி வந்த சீன கப்பல்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இயற்கை பசளைகளை கொண்டு எல்லா தாவர உணவு உற்பத்திகளையும் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒரு திட்டத்தை ஆரம்பித்து பெறுபேற்றை அரசாங்கம் பெற்றிருக்க வேண்டும்.

அதன் மூலம் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்திருக்கலாம் என்பது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. ஏனென்றால் இவ்வாறான திடீர் முடிவுகள் நாட்டில் மண் சார்ந்த உணவு உற்பத்தி பொருட்களுக்கான தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தக் கூடிய அபாயமும் உள்ளது.

தற்போதய வடபகுதி பயிர்ச் செய்கை இன்னும் அசேதன இரசாயனத்தை நம்பியதாகவே இருக்கின்றது. நம்நாட்டு விவசாயம் திசைமாறி அசேதன இரசாயனங்களின் பயன்பாட்டிற்குள் மூழ்கிவிட்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு விவசாயப் பெருமக்களின் பயிர்ச் செய்கையில் அன்றாட பயன்பாட்டு பொருளாக விவசாயத்திற்கான முதலீடுகளில் அசேதன நச்சுப் பொருட்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இது பற்றிய கரிசனை பலரிடமும் பல மட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவசியம் எதிர்கொள்ள வேண்டிய விடயமாகவும் அதற்கான தீர்வினை எட்டுவதற்கான வழிமுறைகளையும் நாமே கண்டுபிடிக்க வேண்டும். மாற்று வழிகள் பலவற்றை பரிந்துரைக்கலாம். உயிர்ப்பசளைகள், உயிர்க்கொல்லிகள் (பூச்சி மற்றும் பூஞ்சண கொல்லிகள், களை கொல்லிகள்) மற்றும் இரை கௌவிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் நுண்ணங்கிகள் என பலவகைகளுண்டு. இவற்றைப்பற்றி ஆய்வுகளும் நிறையவே செய்யப்பட்டிருந்தாலும் எமது பிரதேசத்திற்கு உகந்ததான அங்கிகளை இனங்கண்டு அவற்றை இனம்பெருக்கி விவசாய பெருமக்கள் இலகுவாகவும் மலிவாகவும் பெற ஆவன செய்தல் வேண்டும்.

விவசாயத்தில் அசேதன இரசாயன பசளைகளைப் போல உயிர்ப் பசளைகள் விரைந்து தொழிற்பட மாட்டாதவை. அதனால் பயிர்களில் உயிர்ப்பசளைகளின் தாக்கம் உடனடியாகத் தெரிவதில்லை. இது விவசாயப் பெருமக்களிடையே உயிர்ப்பசளைகளினை பயன்படுத்துவதில் தற்காலிக பின்னடைவை தோற்றுவிக்கும். ஆனால் அசேதன இரசாயன பசளைகளைப் போலன்றி உயிர்பசளைகளும் நுண்ணங்கிகளும் நின்று பெருகி மண்ணுக்கு வளஞ்சேர்ப்பனவாகும். காலப் போக்கில் உயிர்ப்பசளைகளினது தாக்கம் மண்ணிலும் பயிரிலும் உணரப்படும்.

உயிர்ப்பசளைகளை பயன்படுத்துவது விளைநிலத்திற்கும் பயிருக்கும் நல்லது. அத்துடன் அதனால் சூழல் வளப்படும். இயற்கையுடனான விவசாயத்திற்கான திறவுகோலாக



அது அமையும். எமது சூழல் தொகுதி தனித்துவமானது அத்துடன் அந்நிய தேசத்திலிருந்து நுண்ணங்கிகளை வரவழைக்காமல் எமது பகுதியில் உள்ள வளமான அங்கிகளைப் பிரித்தெடுத்து அவற்றை இனங்கண்டு அவற்றினது பீடைகட்டுப்படுத்தும் ஆற்றல் அல்லது தாவரத்திற்கேற்ற பசளைப் பெறுமானத்தை ஈடுகட்டும் வழிவகைகளை அறிதல் வேண்டும். உயிர்ப்பசளைகள் தாவரத்திற்கு எதுவித தீங்கையும் ஏற்படுத்தாது. மேலும் இவ்வாறான அங்கிகள் இங்குள்ள சூழலில் அதிகமாக பெறக்கூடியதாக இருப்பதனால் இங்கும் அவை பல்வேறு தாக்கத்திற்கு உட்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்துடன் உயிர்ப்பசளைகளை கழிவுப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்தால் சாலையோரம் தேங்கிக்கிடக்கும் குப்பைகளுக்கு “குட்பை“ சொல்ல கிடைக்கும் வாய்ப்பின் மூலம் கழிவகற்றல் திட்டம் நிறைவுபெறும். வீட்டில் சேரும் தாவரக் கழிவுகளை முறையாக மீள்சுழற்சி செய்து அவற்றை இயற்கையுரமாக பயன்படுத்துவது விரிவாக்கப்படல் வேண்டும். நாம் இந்த இடர்காலத்தில் கற்றுக்கொண்டவை ஏராளம். அவற்றை அலசியாராய்ந்து இயற்கைவழி விவசாயத்திற்கு எம்மை நாம் மாற்றிக் கொள்ளாது விட்டால் இந்த அனுபவமும் வீணாகப் போய்விடும்.



இன்றைய காலகட்டத்தில் உயிர் பசளைகளை உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகூட வசதி பாரியளவில் தேவைப்படுகின்றது. இவ்வாறான உயிர்பசளைகளை உற்பத்தி செய்வதில் தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்வரவேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான உயிர்ப் பசளைகளை உற்பத்தி செய்வதிலும் அவற்றினது பயன்பாடு, பாதிப்பு இன்னும் அவற்றினால் சூழலில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் அனைத்துமே கண்காணிக்கப்படுவதுடன் ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டு மேலும் அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தும் வழிகளையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும். அனைத்திற்கும் மேலாக விவசாயப் பெருமக்களை இவ் உயிர்ப் பசளைகளை பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்க வேண்டும். விவசாயப் பெருமக்களிடையே மனமாற்றத்தை கொண்டுவருவதோடு அவர்களை ஊக்குவிப்பதற்கும் பலவழிகளிலும் நாம் முயற்சி செய்ய வேண்டும். விவசாயப் பெருமக்களை அசேதன இரசாயனப் பாவனையிலிருந்து விடுவித்து

சேதன விவசாயத்தை செய்ய ஊக்குவிப்பதுடன் அவர்களுக்கான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

இந்த மாற்றத்தை எமக்கான மாற்றமாக கொண்டு இயற்கைவழி விவசாயத்தை மேலும் முன்னெடுக்கலாம். உற்பத்தியாளர்கள் அனைவரையும் பாதுகாக்கின்ற அதேநேரத்தில் அவர்களின் உணவுற்பத்திக்கான வழிவகைகளையும் குறிப்பாக சந்தைப்படுத்தலையும் முறையாக ஏற்படுத்திக் கொடுத்தால் எமது விவசாயத்தைக் காப்பாற்றுகின்ற அதே நேரத்தில் எமது வளங்களையும் நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.




உணவுற்பத்தியின் போது நாம் பயன்படுத்தும் தற்போதய பயிரினங்களை ஒரு கணம் மீள் கணிப்பிற்குள்ளாக்க வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பயிரிழப்பிற்கு காரணமாயிருக்கும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்கு பரிந்து ரைகள் வழங்கப்பட்டாலன்றி விவசாயிகளினால் சிறப்பான விவசாயச் செய்கையை செய்ய முடியாதிருக்கின்றது. முன்னைய காலத்து பயிர்ச்செய்கை



முறைகளிலிருந்து தேவையான மாற்றங்களை உள்வாங்கி தற்போதய பயிர்ச் செய்கையை சமகால பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கக் கூடியதான வகையில் பயிர்ச் செய்கையில் புதிய சூழலுக்கிணைவான தொழில் நுட்பங்களை உள்வாங்கி தேவையான மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும். விவசாய செய்கையில் பிரச்சனைகளாக உள்ள பீடைகள் மற்றும் நோய்களின் பிரச்சனைகள் இவற்றினைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் பூஞ்சண நாசினிகள் உள்ளடங்கலாக பீடைநாசினிகள் மேலதிக பயன்பாடு அவற்றினாலான சூழலில் ஏற்படுத்தப்பட்ட தாக்கம் என்பன கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் பயிர்ச்செய்கைக்கு தேவையான உள்ளீடுகளான சிறந்த விதை, பசளை, பீடைக்கட்டுப்பாட்டு முறைகள், நீர் மற்றும் வளமான மண் என்பனவற்றை கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகளைப் பற்றியும் நாம் அதிக கவனஞ்செலுத்த வேண்டும்.

ஆராய்வோம்......

ரசிக்கும் சீமானே!

# ராட்சசன் வேண்டாம்! ரசிகன் வேண்டும்!

இ.தனிஷ்ரன்

சம்பந்தம் ஒரு ஸ்டண்ட் மேன். சினிமாவில் சண்டைகளில் நடிப்பவன். நடிகர்களுக்கு டூப் போடுபவன். பலமானவன். ஆனால் ஒண்டிக்கட்டை. அனுமான் பக்தன் வேறு. காதல் - திருமணம் என்றாலே ஆகாது.
இப்படியான ஒருவனுக்கு காதல் மலர்ந்திருக்கிறது.

அவன் காதலி செல்லமாய் இப்படி விழிக்கிறாள்,

//கடோத்கஜா கடோத்கஜா//

ஏன் கடோத்கஜன் என்ற விழிப்பு? யார் இந்த கடோத்கஜன்?

பாண்டவர்கள் வனவாசத்தின் போது ஒரு காடு வழியே கடந்து செல்கிறார்கள். அந்த காட்டிலே இருந்த அரக்கன் ”இடும்பன்” என்பவன் பாண்டவர்களை கொன்று உண்ண ஆசைப்படுகிறான். அதனால் தன் சகோதரி ”இடும்பி” ஐ அனுப்பி அவர்களை கொன்று வரச் சொல்கிறான். கொல்ல வந்த அவளோ, பாண்டவர்களில் ஒருவனான பீமனை கண்டு விரும்புகிறாள். நீண்ட நேரம் இடும்பி திரும்பி வராததால் இடும்பன் தேடி வர, பீமனுக்கும் இடும்பனுக்கும் நடக்கும் சண்டையில் இடும்பன் கொல்லப்படுகிறான். பின்னர் இடும்பி பீமனைத் திருமணம் செய்கிறாள். இவர்களுக்கு பிறந்த மகன் தான் கடோத்கஜன்.

“அடி பலவான் பீமனின் மகன் அடா அறம் தருகிற தருமரின் உறவடா”

கதாயுதம் போன்ற முடி இல்லாத மண்டையை உடையவன் என்று பொருள். பீமனின் பலமும் இடும்பியின் மாய தந்திர வித்தைகளும் இணைந்த பராக்கிரமசாலி கடோத்கஜன்.

“கட கட கட கடோத்கஜன்
பர பர பர பராக்கிரமன்”

ஸ்டண்ட் மேன் சம்பந்தம் இங்கு காதலி கண்களுக்கு கலைகளை ரசிக்க தெரிந்த பலசாலி கடோத்கஜனாகிவிட்டான்.

//கடோத்கஜா கலாதரா//



ஜானகி ஒரு டாக்டர். சம்பந்தத்தை அவளுக்கு அறவே பிடிக்காது. அவளுக்கும் காதல், திருமணம் என்பவற்றில் உடன்பாடு இல்லை. ஒரு ஆக்சிடென்டின் போது சம்பந்தத்துக்கு ஜானகி சத்திரசிகிச்சை செய்யவேண்டி இருக்கிறது. சத்திர சிகிச்சையின் போது தவறுதலாக அவளது கைக்கடிகாரத்தை சம்பந்தத்தின் வயிற்றில் வைத்து தைத்து விடுகிறாள்.

ஆப்ரேஷன் முடித்து வீடு வந்த சம்பந்ததுக்கு கடிகாரத்தின் சத்தம் “டிக் டிக்“ என்று கேட்டபடியிருக்கிறது.

//டிக் டிக் என்று சத்தம் உன்னாலே என்னுள்ளே கேட்கின்றதே கண்ணே//

அது காதலின் சத்தம் என்று சம்பந்தம் நினைக்கிறான். உண்மையில் டிக் டிக் கடிகாரத்தின் முள் அசைவுச்சத்தம். இவளுக்கோ தன் தவறை நினைத்து “பக் பக்“ என்று இருக்கிறது.

// பக் பக் என்று அஞ்சி உன்னாலே என் உள்ளம் வேகின்றதே கண்ணா//

இந்த கடிகாரம் சம்பந்தத்தின் வயிற்றினுள்ளே வைத்து தைத்த கதை வெளியே தெரிந்தால்



இவளது வேலை காலி. அதனால் சம்பந்தத்தை காதலிப்பதாக பாசாங்கு காட்டி அவனை மயக்கி மீண்டும் சந்திரசிகிச்சை செய்து கடிகாரத்தை வெளியே எடுக்கலாம் என்று திட்டம் தீட்டுகிறாள்.

இவளது போலி காதலை நம்பி சம்பந்தம் இவளை காதலிக்க ஆரம்பித்து விடுகிறான். அவன்



காதலில் தோய்ந்து வாட, இவள் அவனை காதல் மொழியில் மயக்குகிறாள்.

//தையல் போட்டு என்னை தைத்தாயே
தையல் இனி உன்னோடு தான் கண்ணே//

ஆபரேஷன் தையலால் தையலாளுடன் மலர்ந்த மையல் அல்லவா இது!

//கையை போட்டு என்னை கையாட கை
சேரு என்னோடு தான் கண்ணா//

மீண்டும் ஆப்ரேஷன் செய்து கைக்கடிகாரத்தை வெளியில் எடுக்க

காதல் மொழியில் கை போட்டு கையாட அழைக்கிறாள் இவள். அவள் காதல் மொழியை உண்மை என்று நம்பிய இவன்,

//ஒரே நாளில் காதல் நோய் தான்
உன்னால் வந்ததே தோழி//

காதலி டாக்டர் என்பதால் காதல் ”நோய்” என்பதை அழுத்தி சொல்கிறான். ஆனால், அவள் சிந்தனையோ இப்படி ஓடுகிறது,

“ஒரே நாளில் என்னால் வர அது என்ன கொரோனாவா?“ என்று நினைத்தபடியே, தன் தேவையும் நினைப்பும் சேர்ந்து பதில் சொல்கிறாள்,

//ஒரே ஊசி போட்டால் போதும்
உயிர் வாழுமே தோழனே தோழனே//



இவனை மயக்கமடைய செய்ய, ஒரு ஊசி போட்டால் போதும். பிறகு சத்திரசிகிச்சை செய்து விடுபட்ட கடிகாரத்தை எடுத்துவிடலாம். ஊசியில் என்ன மருந்து இருக்க வேண்டும் என்பதனையும் டாக்டர் மூளை சிந்தித்தது!

General Anaesthesia - Propofol. பால் வண்ண நிறம்.

“பால் வண்ணப்பறவை குளிப்பதற்காக
பனித்துளி எல்லாம் சேகரிப்பேன்”

என்று காதல் மயக்கத்தில் புலம்புபவனை மயக்க, பால் வண்ண மருந்து ஏற்றுவது பற்றி யோசிக்கிறாள்.

ஒரே நாளில் பரவும் அளவிற்கு “கொரோனா“ போன்ற தீவிர நோய் என்றாலும் தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் தான் உயிர் வாழும். அதுவும் ஒன்று போதாது. குறைந்தது இரண்டு. மூன்றாவது, நான்காவது கூட தேவைப்படலாம். அது கொரோனாவின் கொள்ளுப் பேத்தி , எள்ளுப்பேத்திகள் காட்டும் ஆட்டத்தில் தங்கியிருக்கிறது.

பைசர், அஸ்ராசெனிக்கா, மொடெர்னா, ஜோன்சன் அன்ட் ஜோன்சன், சினோபாம், சினோவக், ஸ்புட்னிக் இவற்றில் ஏதாவது ஒரு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள். கொரோனா தொற்று ஏற்பட்டாலும் தடுப்பூசிகள் உயிருக்கு பாதுகாப்பை வழங்கும்.

மருத்துவ மூளை எங்கெல்லாமோ பாய்ந்து கொண்டிருக்க, அதனை நிறுத்தி மீண்டும் அவனை மயக்கும் தந்திரத்தை சிந்தித்தாள்.

இவள் காதல் நாடகம் நடத்திக்கொண்டிருக்கும் ஒருநாள், சம்பந்தத்தின் தாத்தா வீட்டுக்கு சென்ற போது, அவர்கள் திருமண

நிச்சயதார்த்தை ஏற்பாடு செய்து விடுகிறார்கள். அங்கே தான் அவனை மயக்க, இவ்வளவு ஏற்பாடும் நடந்து கொண்டிருக்கிறது.

//கடோத்கஜா கலாதரா
விவாகமே விடாதுடா//

திருமணமே வேண்டாமென்று இருந்த இருவருக்கான நிச்சய தாம்பூலம் மாற்றப்படுகிறது.

//இன்றோடு ஹனுமார் பக்தன்
பிரம்மச்சரியம் முடிகிறதே
அன்போடு கைத்தளம் பற்ற
கன்னிநிலா தான் வருகிறதே//

இன்னும் காதல் மொழி சேர்ந்து மாயவலையை விரிக்கிறாள்.

//ஆயிரத்தில் ஒருவன் என்று
அழகன் என்று அறிஞன் என்று
ஆசை வைத்த இளமான்
நீயே கிடைத்தாயே//

அவளின் வெற்று வாய்ப்புகழ்ச்சியில் பூரித்து போன இவனோ இப்படியாக சொன்னான்,

//ஆன வரை விழியால் பேசு
மௌனம் என்னும் மொழியால் பேசு//

காதலர்களிடையே பேச்சுக்கும் கருத்து பரிமாற்றத்திற்கும் வார்த்தைகள் எப்பொழுதும் அவசியம் இல்லை. மௌன மொழியில் கண்களால் பேசுவது காதலுக்கு தனித்துவமானது.



"மௌனமே பார்வையாய் பேசி கொண்டோம்
நாணமே வண்ணமாய் பூசி கொண்டோம்
புன்னகை புத்தகம் வாசிக்கின்றோம்
என்னிலே உன்னையே சுவாசிக்கின்றோம்
இரு உள்ளம் பல வண்ணங்களை அள்ளும்
சில எண்ணங்களை சொல்லும்
துள்ளும் கண்ணம்மா"

அது தான் - அந்த தனித்துவம் தான் காதல்!

பெண்களுக்கு கண்களால் பேசும் திறமை இயல்பாகவே இருந்தாலும் ஆண்களுக்கு காதலால் தான் அது கிடைக்கிறது. காதல் இல்லாது பெண்ணின் கண்களை புரிந்து கொள்வதற்கு ஆண் பல பயிற்சிகள், சில பரீட்சைகள் தாண்டி பட்டங்கள் பெற வேண்டியிருக்கும்! அனேகருக்கோ,

"கண் பேசும் வார்த்தைகள் புரிவதில்லை
காத்திருந்தால் பெண் கனிவதில்லை"

அவளாக விரும்பாத வரை எந்த பெண்ணும் எப்பொழுதுமே கனிவதில்லை! இங்கும் இவள் விரும்புவது போல் பாசாங்கு காட்டுவதால் தான் இந்த காதல் நாடகம் - ஊடல் ஒத்திகை எல்லாம்!

//விழி மேய்ந்து ஓயும் போது
விரல் மேயுமே தோழி
கோடிப் பூவும் கூச்சம் கொண்டு
மடி சாயுமே
தோழியே தோழியே//



கண்கள் காதலால், காதலாள் உடலின் தெளிவுகளை சுழிவுகளை மறைவுகளை தீண்டிச்சென்ற பிறகு, விரல்களின் நரம்புகள் கிட்டார் மீட்ட ஆரம்பிக்கும். காதலின் சிலிர்ப்பு அது.

“தீண்டாய் மெய் தீண்டாய் தாண்டாய் படி தாண்டாய்
ஒரு விரல் வந்து உன்னைத் தீண்டியதோ
உன் நரம்போடு வீணை மீட்டியதோ
உன் உயிர்க்குள்ளே காதல் அம்பைத் தொடுத்திட்டதோ”

பெண் உயிரினுன் இசை தந்திகளை மீட்டும் காதலன் விரல், அவள் எழுப்பும் ஸ்பரிச இசை காதலினை மேலும் ஜீவிதமாக்கும். கண்ணால் மீட்டும் போதும் கைகளால் மீட்டும் பொழுதும் அவள் உயிர் நாண் வேறு வேறு ஸ்வரங்களில் அதிர்கிறது.

“விழியோடும் தீண்டல் உண்டு
விரலோடும் தீண்டல் உண்டு
இரண்டோடும் பேதம் உள்ளது
விழித்தீண்டல் உயிர் கிள்ளும்
விரல் தீண்டல் உள்ளம் கிள்ளும்”

இணையை மெய்யின் பாதியென இணையேற்பதற்கான அரங்கேற்றம் - ரொமான்ஸ். அதற்கான பொது அங்கீகாரம் திருமணம். அதற்கான முதல் ஒப்பந்தம் - நிச்சயதார்த்தம்.

//மாலையிட ஒரு நாள் பார்த்து
மணநாள் பார்த்து திருநாள் பார்த்து//

பின் தனக்கே சொந்தமான நிர்வாணத்தை காதலுடன் தன்னவரிடம் ஒப்படைப்பதில், காதல் இன்னும் இன்னும் வளர வேண்டும்.

//சேலை தொடும் மறு நாள்
வந்து மறுப்பேனா//

அவள் மறுத்தாலும் அதையும் மீறி ஆசைகள் அலை மோத,

//காளை நெஞ்சம் கேட்காதம்மா
கடிகாரம் தான் பார்க்காதம்மா
காற்று என்ன நேரம் பார்த்தா
நதியில் குளிக்கிறது//

நேரம் காலம் இல்லாது கொஞ்ச வரும் நாயகனை, பெண் பொய்க்கோபம் காட்டி விரட்டுவாள்.

“மத்யான நேரம் பாய் போட சொன்னா
மாட்டேன்னு சொல்லுவியோ
மாட்டேன்னு சொன்னா சும்மாவா விடுவேன்
மேட்னி ஷோவுக்கு கூப்பிடுவேன் ஏன்னா”

ஒரு கடிகாரத்தை மாறி வைத்து தைத்து விட்டு, காதல் நடிப்பிலும் பின்னிக் கொண்டிருக்கிறாள் ஜானகி.

//பூங்கரத்து வளையாடாதா
வளையாடத்தான் விளையாடாதா//



காதலர்கள் கூடும் போது பூப்போன்ற கைகளிலிருக்கும் வளையல்கள் குலுங்க,

“வளைக்கையை பிடித்து
வளைக்கையில் விழுந்தேன்
வலக்கரம் பிடித்து வலம் வர நினைத்தேன்”

அவன் இவளது வளையல்கள் அணிந்த கையை பிடித்த போது அவன் மனக்கடலில் விழுந்தவள், அவனது வலக்கையை பிடித்து திருமண நாளில் அக்னி குண்டம் சுற்ற ஆசை கொண்டவள்.

“அன்று விழுந்தவன் இன்னும் எழும்பல மெல்ல மெல்ல கரைஞ்சேன்”

என்று இன்னும் காதல் மயக்கத்தில் மூழ்கும் இவன் மறுபக்கம்,


“இந்த வலக்கையில் வளையல்கள் நானல்லவா
இன்று வலக்கையை வளைக்கின்ற நாளல்லவா
சுகம் வலக்கையை வளைக்கையில் உண்டானது
மெம்மேலும் கைவளை வளை என ஏங்காதோ”

அவளது வலது கையில் அணிந்த வளையல்களாய் மாறிய காதலன் கைகளை பற்றிக்கொண்டு, திருமண பந்தலில் இருக்கையில் வரும் சுகம் இன்னும் வேண்டும் வேண்டும் என்று காதல் பதுமையாள் ஏங்க,

//நேற்று வரை அடைத்தே வைத்த
மடையை நீ தான் உடைத்தாய் இன்று
பாவி மனம் பாயை போட பாடாய் படுத்திறதே//

இவள் வார்த்தைகளில் மயங்கிய அவனோ, திருமணமே வேண்டாம் என்பதிலிருந்து, உன்னிடம் சரணடைவதே வாழ்க்கை லட்சியம் என்று ஏங்க ஆரம்பித்துவிட்டான் இந்த கடோத்கஜன்,

//கடோத்கஜன் கலாதரன்
கண்ணே உந்தன்
கையில் சரண்//



குருஷேத்ர போரின் இறுதியில் பாண்டவர் படை சார்பாக, கடோத்கஜன் களத்துக்கு வருகிறான். அவன் பராக்கிரம பலத்தால் கௌரவப்படை கதிகலங்குகிறது. எந்த ஆயுதமும் அவனை எதுவும் செய்யவில்லை.

“திசை எங்கிலும் என் கொடி பறக்கணும்
புவனம் முழுதும் என் குரல் ஒலிக்கணும்
எதிரிகள் இரு பாதம் பணியனும்
சரணாகதி தரும் வரை நடுங்கனும்”

கலங்கிய துரியோதனன், கர்ணனிடம் சென்று இந்திராஸ்திரத்தை பயன்படுத்தி கடோத்கஜனை கொல்லுமாறு கேட்கிறான்.

கர்ணனோ, அது “அர்ச்சுனனை கொல்வதற்காக“ என்று மறுத்தாலும் போர்க்களத்தில் கடோத்கஜனின் பாதிப்பால் இந்திராஸ்திரத்தை கடோத்கஜன் மேல் ஏவினான். கடோத்கஜன் இறந்து போகிறான்.

“பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி
இருக்கின்றது என்பது மெய் தானே”

அங்கே, இந்திராஸ்திரத்தை அழிப்பதற்கு கண்ணனின் சூழ்ச்சி கடோத்கஜன் பிறப்பு. இங்கோ, தனது மருத்துவத் தவறை சரி செய்வதற்கு ஜானகியின் சூழ்ச்சி கடோத்கஜன் சம்பந்தத்தின் காதல். கடிகார ஆப்ரேஷனுடன் சம்பந்தத்தின் காதல் நரம்புகளும் காதல் குருதிக் குழாய்களும் அறுத்து எறியப்படும் என்று அறியாது, காதல் போதை தலைக்கேறி இருக்கிறான் சம்பந்தம்.



# பிளவுபட்ட உதடு மற்றும் அண்ணம்
## [Cleft Lip and palate]

*சஜீவன் சத்தியசீலன்*
*பல்மருத்துவ பீடம்*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

### பிளவுபட்ட உதட்டை சீரமைத்தல்



சத்திரசிகிச்சையின் முன் சத்திரசிகிச்சையின் பின்

பிளவுபட்ட உதட்டை சத்திர சிகிச்சை மூலமே, சரி செய்ய முடியும். பிறந்து மூன்று மாதங்களில் இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும். உதட்டில் உள்ள தோல், தசை, மென்படலம் என்பன சரி செய்யப்படும். (படம்-1)

### பிளவுபட்ட அண்ணத்தினை சீரமைத்தல்




சத்திரசிகிச்சையின் முன் சத்திரசிகிச்சையின் பின்

பிளவுபட்ட அண்ணத்தின் சத்திர சிகிச்சையானது 10-12 மாதத்தில் செய்யப்படும். பேசத் தொடங்கும் முன்பு இச்சிகிச்சை செய்யப்பட்டால் பேசும் ஆற்றல் அதிகமாகும் என்று ஆராய்ச்சிகளின் மூலம் உறுதியாகின்றது. (படம் 2)

### மொழிவிருத்தியும், பேச்சு விருத்தியும் (படம் 3)

| வயது | சாதாரண பேச்சுவிருத்தி |
|---|---|
| 3 - 4 | சத்தம் போட்டு சிரித்தல் |
| 5 | சத்தங்களை உண்டாக்குவதும் பாவனை செய்தலும் |
| 6 - 7 | சில சொற்களை புரிந்துகொள்ளல் |
| 10 - 12 | 20–30 சொற்களை அர்த்தத்துடன் புரிந்துகொள்ளல் (அம்மா, அப்பா...) |
| 12 - 18 | மேலும் சில சொற்களை புரிந்து கொள்ளல், இரண்டு சொல் வசனங்களை அமைத்தல். |
| 24 | 100/150 சொற்களை புரிந்து கொள்ளல், எளிய வசனங்களை அமைத்தல். |



## பேச்சை சீர் செய்தல் [Speech Theraphy]

வாயின் மேற்பகுதியில் அண்ணம் உள்ளது. அதன் முன்பகுதியில் வன்மையான [Hard palate] அசைவில்லாத அண்ணமும் பின்பக்கம் அசையக்கூடிய மென்மையான அண்ணமும் [soft palate] உள்ளது. அண்ணம் உள் நாக்கில் [Uvula] முடிவடைகின்றது.

1. அண்ணத்தின் சரியான செயற்பாட்டாலும் தொண்டைத் தசையின் அசைவினாலும் வாயானது மூக்கு குழியில் இருந்து சரியாக பிரிக்கப்பட்டு வேறாக்கப்பட வேண்டும்.

2. உதடுகள் சரியான முறையில் மூடப்பட வேண்டும்.
3. கதைக்கும் பொழுது நாக்கானது அண்ணத்தின் வேறு பகுதிகளையும் பற்களையும் தொடுவதற்கு சுதந்திரமாக அசையக்கூடியவாறு இருக்க வேண்டும்.

மேற்கூறிய காரணங்கள் போதாமையினால் பிளவு பட்ட உதடு மற்றும் அண்ணத்துடன் பிறந்த குழந்தைகளினால் சரியாக பேச முடிவதில்லை. எனினும் வைத்திய நிபுணர் குழுவில் உள்ள பேச்சு மற்றும் மொழி விருத்தியாளரின் [Speech and language therapist] உதவியுடன் பேசும் ஆற்றல் அதிகரிக்கப்படும்.

## பேச்சு சிகிச்சைக்கு உங்கள் குழந்தையினை தயார் செய்தல்

☐ அவதானிக்கவும், கவனிக்கவும், கூர்ந்து கவனிக்கவும் உங்கள் குழந்தையின் திறமையினை விருத்தி செய்தல் வேண்டும்.

☐ இப்படியான பயிற்சியினை விளையாட்டாகவும் நடிப்பாகவும் செய்தால் பயனுள்ளதாக அமையும்

☐ விளையாட்டாக “ப“, “க“, “ர“ போன்ற மென்மையான சத்தங்களை நீங்கள் பேசும் பொழுது உங்கள் குழந்தை உங்கள் முன்பு இருந்து உங்கள் வாயினை கவனிக்க கூடிய ஒரு அமைதியான இடத்தினை தேர்வு செய்யவும்.

☐ஓடும் தண்ணீர், வாகனத்தின் சத்தம், மிருகங்களின் சத்தம் போன்ற அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சத்தங்களை உங்கள் குழந்தையுடன் சேர்ந்து கேட்டு அவற்றின் சத்தங்களை போல திரும்ப செய்து காட்டி குழந்தையினையும் செய்ய வைத்தல் வேண்டும்.

### பிள்ளையுடன் பேசுதல்

☐ எப்பொழுதும் பிள்ளையுடன் பேசுங்கள். உங்கள் குரலை மாற்றுங்கள் முக பாவனையை மாற்றி உங்கள் குரலின் தொனியை மாற்றி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அதனால் உச்சரிப்பையும் பேச்சையும் அனுபவம் மூலம் பெற்றுக்கொள்ளும். விரைவாக பேச வேண்டாம்.

☐ மாறுபட்ட பேச்சு மூலம் குழந்தைக்கு சம்பாசனை வடிவில் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும். பேச்சு விருத்திக்கு இது ஒரு முக்கியமான படியாகும்.

☐ எப்பொழுதும் பேசும் போது தெளிவாகவும் மாறுபட்ட தொனியிலும் பேசுவதன் மூலம் இலகுவாக கிரகிக்கக் கூடியதாக இருக்கும்.

### ஊதுதல்~Blowing

சூடான உணவினை ஊதி ஆறவைத்தல், சவர்க்கார நுரையினை ஊதுதல், விசிலை ஊதுதல் போன்ற செயலினால் உதட்டு அசைவுகள் ஏற்பட்டு வாயினுள்ளே காற்று திறம்பட உண்டாகும்.

### கேட்டல்~Listening

நடுச்செவியில் சுரப்புகள் தேங்கி விடுவத்தினால் பிளவுபட்ட உதடு மற்றும் உதட்டுடன் பிறந்த குழந்தைகளுக்கு கேட்பதில் பிரச்சினை ஏற்படும். இது சாதாரண பிள்ளைகளிற்கு கூட ஏற்படலாம். வைத்திய நிபுணர் குழுவில் உள்ள காது, மூக்கு, தொண்டை நிபுணர் [ENT surgeon] காது தொடர்பான சிகிச்சைகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

பெரும்பாலான கேட்டல் பிரச்சினைகள் வாழ்கையின் முதல் சில வருடங்களுக்கு மட்டுமே நீடிக்கும். செவிப்புலன் விருத்தியில் உள்ள குறைப்பாட்டால் கேட்டலில் உள்ள பிரச்சினைகள் சில வேளைகளில் நிரந்தரமாகவும் இருக்கலாம். பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்கும் சில விளைட்டுக்களை கேட்பதற்கும் சொற்களை பேசுவதற்கும் உறுதுணையாக அமையும்.

### பல் சுகாதாரம் ~ Oral hygiene


பிள்ளைகளின் பற்களை நன்கு பராமரிக்க வேண்டியது மிக முக்கியம்.பற்சொத்தையில் [Dental Caries] இருந்தும் பல் ஈறு நோயில் [Periodontisis] இருந்தும் பாதுகாத்தல் வேண்டும்.

சிறந்த வாய் ஆரோக்கியத்திற்கு

1. சரியான முறையில் தினமும் காலையிலும் இரவிலும் பல் துலக்க வேண்டும்.

2. இனிப்பு பண்டங்கள் பானங்கள் என்பன கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

3. உங்கள் பல் வைத்தியரிடம் இருந்து தேவையான அறிவுரைகளையும்



சிகிச்சைகளையும் கிரமமாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

### எலும்பு மாற்று சிகிச்சை [Alveolar Bone grafting]

பிளவுகளினால் எலும்பு பாதிகப்பட்டு இருந்தால் பற்களுக்கு இடையில் காணப்படும் இடைவெளியை எலும்பு மாற்று சிகிச்சை மூலம் சரி செய்ய முடியும். பற்களின் விருத்திக்கும் மூக்கின் சரியான வடிவத்திற்கும் இது இன்றியமையாதது.
பல் ஒழுங்காக்கல் சிகிச்சையின் பின்பு இச்சிகிச்சை செய்யப்படும்.
இதற்கு தேவையான எலும்பு குழந்தையின் இடுப்பில் [iliac crest] இருந்து எடுக்கப்படும்.

### பல் ஒழுங்காக்கல் சிகிச்சை ~ Orthodontic treatment

பிளவு பட்ட அண்ணத்தினால் எலும்புகள் பாதிக்கப்படும் பொழுது முன்பற்கள் பிழையான முறையில் முளைக்கும். சில சமயங்களில் சிறிய பற்கள் அல்லது பற்கள் முளைக்காமலே போகலாம். அச்சிகிச்சை பல் சீராக்கும் வைத்தியரினால் 11 -12 வயதிலே தொடங்கப்பட்டு செய்யப்படும்.

பல் சீராக்கும் சிகிச்சை எலும்பு மாற்று சிகிச்சைக்கு சில காலம் முன்பு செய்யப்படும்.

## அவள் தான் அழகானவள்!!!

*பிரபல ஹாலிவுட் 'ஜேம்ஸ் பாண்ட்' நடிகர் பியர்ஸ் பிராஸ்னன். அவரிடம் அவரது மனைவியின் உடல் பருமன் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் சொன்ன பதில் இதுதான் :*



"எங்கள் நண்பர்கள் என் மனைவிக்கு எடை குறைப்பு அறுவை சிகிச்சை செய்துகொள்ளலாம் என ஆலோசனை சொன்னார்கள். நான் அவரது உடலின் ஒவ்வொரு வளைவையும் நேசிக்கிறேன். என் கண்களுக்கு அவரே உலகின் மிக அழகிய பெண். கூடவே, எங்கள் ஐந்து குழந்தைகளுக்கு அவர் அம்மா.
கடந்த காலத்திலும் அவரை அவரது அழகுக்காக நேசித்ததை விட, அவருக்காக நான் நேசித்ததே அதிகம். இப்போதோ கூடுதலாக அவர் எங்கள் குழந்தைகளுக்கு தாய் என்பதாலும், எப்போதும் அவரது அன்புக்கு தகுதியானவனாக இருக்கவே நான் விரும்புகிறேன்."

## வந்தது அதிகாரம்

தன் காலடியில் வந்து விழுந்த தலையால், அதிகம் பீதி அடைந்த முகலன், நிலை தடுமாறி, சத்திரத்தின் திண்ணையில் துள்ளி ஏறிக்கொண்டான்! அவன் விழிகள் அகலத்திறந்து, இதயம் படபடத்தது! திடீரென, குழலி சத்திரத்தின் முன் பகுதியில் குதித்தாள்! எதிர்பாராத இந்த நிகழ்வால் முகலன் மேலும் அதிர்ச்சியடைந்தவனாய் செய்வதறியாது திகைத்து நின்றான்! குதித்த குழலியோ கலகலவெனச் சிரித்தபடி, அந்த மனிதத் தலையைத் தன் கைகளால் எடுத்து தன்முகத்துக்கு நேரே வைத்து அசைத்தாள்! இப்போது தான் முகலனுக்கு எல்லாம் புரிந்தது! சற்றுக் கோவமாகவே,

“ஏய் குழலி” இது என்ன விளையாட்டு? உன் குறும்புக்கு ஒரு அளவு இல்லாமல் போய்விட்டது. உன்னைக் கண்டிக்க யாரும் இல்லையா…?”

என்றபடி மூச்சு வாங்க, திண்ணையில் இருந்து கீழே இறங்கினான்!

“ஐயா… இளவரசே, மனிதத் தலைக்கும், போலிக்கும் வேறுபாடு தெரியாதவரே… குங்குமச் சாந்து க்கும் குருதிக்கும் இடையில் குறிப்பறியத் தெரியாத குமாரரே…”

என்று சொல்லிச் சொல்லி மேலும் சிரித்த குழலிமீது, கோவப்படுவதா…? தன் அறியாமையை எண்ணி வெட்கப்படுவதா…? என்று தெரியாத

# ஜீவா ஷஜீவனின் சிங்ககிரித்தலைவன்

### ஆட்சி ௨௧

முகலன், சரி… சமாளித்து விடுவோம் என்று குழலியின் அருகில் போய், அந்தப் போலி மனிதத் தலையை தன் கைகளில் வாங்கினான்!.

“அடடே…. அப்படியே அச்சு அசலாக மனிதத் தலையைப் போலவே செய்திருக்கின்றாயே… நீ திறமைசாலி தான்! ஆஹா… இந்தத் தலைமுடியைக் கூட, பனம்பழத்தின் தும்பில் மிக கச்சிதமாக ஒட்டியிருக்கிராயே எப்படி இதைச் செய்தாய்…?”

முகலன் தன் நிலையை சமாளிப்பதற்காகத் தன்னைப் புகழ்வதை குழலி தெரிந்திருந்தாலும், அவனது புகழ்ச்சியை ஏற்றுக் கொண்டவளாக நாணி நின்றாள்!

“இளவரசே ஒரு முழு மனித உருவத்தையே அப்படியே போலியாக செய்து, கருவாடு காயவைக்கும் தொழிலைக் கடற்கரையில் செய்பவர்களுக்கு கொடுத்திருக்கின்றேன்! கடல் பறவைகளிடம் இருந்து உலரும் மீன்களை அவை பாதுகாக்கும்! உங்கள் உருவத்தையும் செய்து தரவா…”

என்றவள் சிரித்தபடியே அங்கிருந்து நகர்ந்தாள்!

அவள் சத்திரத்தை கடப்பதை முகலன் அசடு வழியப் பார்த்தபடி நின்றான்! மகாநாமரின் கைகள் அவனது தோளில் பதியவே, சடுதியாய் திரும்பி,

“வரவேண்டும் ஐயனே… உங்களைத் தேடி இலங்கையில் இருந்து வந்த நால்வரும் உள்ளே உள்ளனர்!”

“அப்படியா முகலா… உன்னைத் தேடிவந்த குழலி வெளியே போய்விட்டாளா?”

என்று, மெல்லிய புன்னகையோடு அவனின் முதகில் தட்டி உள்ளே வருமாறு, சைகை செய்து, தான் முன்னே போனார். மகாநாமரைக் கண்டதும், நால்வரும் எழுந்து முதுகுமடக்கி வணக்கிநின்றார்கள்.

“வரவேண்டும்…
வரவேண்டும்…
காப்பாளர்களே…
உங்கள் வரவுக்காகத் தான் காத்திருந்தேன்! வெற்றியோடு தானே வந்தீர்கள்?”

“ஆம் ஐயனே… இந்தாருங்கள்…” என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது! முகலன் தன்கையில் வைத்திருந்த தீப்பந்தத்தை சற்று உயர்த்திப்பிடித்தான்! அந்த மூட்டையை வைத்திருந்த உருவம் தன் மொட்டாக்கை நீக்கி, தான் வைத்திருந்த மூட்டையை அவிழ்த்து, அதற்குள்ளிருந்த ஒரு அழகிய பேழையை எடுத்து தன் தலைக்கு மேல் உயர்த்தி மகாநாமரிடம் கொடுத்தது!

முகலன் அந்த உருவம் ஒரு பெண் என்று தெரிந்ததும் பெரிதும் ஆச்சரியம் அடைந்தான்!

“விஜயசீலி! உன்னை நம்பி நான் ஒப்படைத்த இந்தப் பெரும் பணியை



நீ வெற்றிகரமா நிறைவேற்றியதை எண்ணி உளம் மிக மகிழ்கின்றேன்!"

அந்தப் பேழையை தன் மார்போடு அணைத்தபடி மகாநாமர் முகலனைப் பார்த்தார்!

"முகலா... இவர்கள் தான் அனுராதபுரத்தின் அரச விசுவா சிகள்! உன் தந்தையார் எனது ஆலோசனையின் படி உருவாக்கிய குழவினர்! முக்கிய அரசபணியில், அந்தரங்க காப்பாளர்களாக இருந்த னர்! எதிரிகளோடும் உறவாடி அவர்கள் திட்டங்களையும் அறியவல்லவர்கள்! ஆனால் காசியப்பன் விடயத்தில் அது பிழைத்துப் போனது! குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் அரசுக்கு எதிரான அரச பணியாளர்கள் போல் நடித்து எதிரிகளின் எண்ணங்களை அறியவல்லவர்கள்... இப்போது, 'அதிகாரத்தை' கொண்டுவந்து கொடுத்திருக்கின்றனர்"

முகலன் சற்றுக் குழம்பிப் போனவனாக

"அதிகாரம் இழந்து தானே, நாமே இங்கு வந்தோம்... எம்மால் எடுத்துவரமுடியாத அதிகாரத்தை, இவர்கள் எப்படி எடுத்து வந்தனர்?"

"முகலா... உண்மை தான்... இலங்கை தேசத்தின் அதிகாரத்தை இவர்கள் கொண்டுவர முடியாது தான்! ஆனால் அதிகாரத்தை அடையாளப்படுத்தும், கௌதம புத்தரின் புனித தந்தத்தை இவர்கள் எடுத்து வந்தனர்! காசியப்பனின் அரண்மனை வளாகத்தை வெள்ளம் சூழ்ந்து, மக்கள் அங்கு அதிகம் செறிவாக இருந்தபோது, விஜயசீலி இப்பெரும் பணியைச் செய்து முடித்தான்"

முகலனின் கண்களில் ஆச்சரிய ரேகை படர்ந்து கிடந்தது! தான் கடல் கடந்து இருந்தாலும் தன் ஆழ்ந்த எதிர்காலம் நோக்கிய சிந்தனையால் மகாநாமர் செய்வித்த காரியத்தின் கனதித் தன்மையை முகலன் நன்கு அறிவான்

"பாட்டனாரே... தங்கள் பராக்கிரம த்தை எண்ணிப் பெரிதும் வியக்கின்றேன்! விஜயசீலி பாராட்டப்பட வேண்டியவன்... மற்றைய மூவரும் தான்!"

"மகனே... நிச்சயமாக இனி இவர்கள் தான் உனக்கு பயிற்சி கொடுக்கும் பணியை செய்யப் போகின்றவர்கள்! வரும்போது பார்த்தேன்... போலித் தலையை கண்டு நீ அச்சம் கொண்டதை! இனி அது இருக்க கூடாது! நிஜத் தலைகளை உன் வாளால் வெட்டி வீழ்த்தும் பாராக்கிரமம் பெற வேண்டும் நீ!"

முகலன் சொல்வது அறியாது தீப்பந்தத்தை இறுகப் பற்றி நின்றான் அது முன்னரை விட அதிகமாகப் பிரகாசித்து எரிந்தது!

*இன்னும் எரியும்....*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | 4 |
| | | | | | 5 | | |
| 6 | | | | 7 | | | |
| | | | | 8 | | | |
| 9 | | | 10 | | | | |
| | | | 11 | | 12 | | 13 |
| 14 | | 15 | | | 16 | | |
| | | 17 | | | | | |

# குறுக்கெழுத்துப்போட்டி 27

சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1. தற்போது நடைபெற்று முடிந்த விளையாட்டுத் திருவிழா
3. அரையின் அரைப்பங்கு
5. நீந்தும் பறவை (திரும்பி)
6. இசைக்கருவி ஒன்று
8. சூரியன்
9. பெண்களின் தலைமுடி
11. நோய்க்கால உணவுமுறை
14. குளம்
16. நாட்காட்டியுடன் தொடர்புபட்ட பழங்குடியினர் (குழம்பி)
17. கூழுக்குப் பெயர்போன மாதம் (திரும்பி)

## மேலிருந்து கீழ்

1. கவிச்சக்கரவர்த்தி
2. கிணற்றில் நீர் அள்ள உதவும் (திரும்பி)
3. கூத்துக்களில் ஒன்று
4. விலங்குகளின் ஒரு உறுப்பு (திரும்பி)
7. சம்மதம் (திரும்பி)
10. ஒரு வகை பூ (திரும்பி)
12. உடல் அடக்கம் செய்யப்பட்ட இடம் (திரும்பி)
13. பகடை கொண்டு ஆடும் விளையாட்டு (திரும்பி)
15. பற்களால் தாக்கு

## குறுக்கெழுத்துப்போட்டி - 26 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 கா | 3 க | வி | | 4 மு | 5 கா | ரி |
| 6 ண் | டு | வ | | 7 வு | க | ன | |
| போ | | 8 ச | ர | க | க் | ம் | |
| 9 த | ர | கு | | 10 னி | க | | 11 அ |
| ரி | | 12 ண் | க | | 13 வ | 14 ல | ம் |
| | | ட | | 15 க | ச | ப் | பு |
| 16 அ | கு | ல | | 17 சா | ம் | க | ய |
| ணி | | ம் | | ரி | | 18 ணை | ம் |

# டென்னிஸ் உலகின் புதிய இளம் நட்சத்திரம்

# ஜான்னிக் சின்னர்

எஸ்.எஸ்.நுஜன்




கடந்த ஆண்டு (2020), பிரெஞ்சு பகிரங்க (French Open) கிராண்ட் ஸ்லாம் தொடரில் காலிறுதிக்கு முன்னேறி அனைவரையும் வியக்க வைத்த ஜான்னிக் சின்னர் (Jannik Sinner); 2021, ஆகஸ்ட் மாதம் 9ம் திகதியன்று வாசிங்டனில் நடைபெற்ற சிட்டி பகிரங்க (Citi Open) தொடரில் சாம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். இதன் மூலம் 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி, இத்தாலியின் இன்னிசெனில் (Innichen, Italy) பிறந்த சின்னர், பதின்ம வயதில் (19 வயது) ஏரிபி (ATP) 500 மட்ட பட்டத்தை வென்ற முதல் வீரர் ஆனார்.

வடக்கு இத்தாலியில் வளர்ந்த சின்னர்க்கு, சிறுவயதிலே டென்னிஸ் மற்றும் காற்பந்து மீது ஈடுபாடு இருந்தது. பின்னர் 13 வயதில் தன் முழு கவனத்தையும் டென்னிஸ் மீது செலுத்தி, பயிற்சியாளர்கள் Riccardo Piatti மற்றும் Massimo



Sartori உடன் பயிற்சியில் ஈடுபட்டார். தன் 17வயதில் 2019ம் ஆண்டு இளையோர் போட்டிகளில் விளையாடுவதை விட்டுவிட்டு ITF Futures இல் நுழைத்த சின்னர் சனவரி, 2020 இல் 553வது இடத்திலிருந்து 78வது இடத்திற்கு அசுரவேகத்தில் முன்னேறி வுழி 100 க்குள் இடம் பிடித்தார். அத்துடன் ATP Newcomer of the Year - 2019 எனவும் அறிவிக்கப்பட்டார்.

2020 இல் தன் கன்னி பிரெஞ்சு பகிரங்க தொடரில் காலிறுதி (QF) வரை முன்னேறி முன்னணி வீரரான ர.்.பேல் நடாலிடம் தோல்வியுற்றார் சின்னர்: 2005இல் நடால்க்கு பின் தன் கன்னி பிரெஞ்சு ஓபனில் காலிறுதிக்கு முன்னேறிய சாதனையும் 2006 இல் நோவாக் ஜோகோவிச்க்கு (19வயது) பிறகு பிரஞ்சு ஓபனில் காலிறுதிக்கு முன்னேறிய இளைய வீரர் என்ற பெருமையும் கிடைத்தது.

ஏற்கனவே 2019 இல் அடுத்த தலைமுறை ஏரிபி (Next Gen ATP Finals) பட்டம் பெற்ற இவர், 2020 இறுதியில் Sofia Open தொடரையும் 2021 ஆரம்பத்தில் Melbourne - Great Ocean Road Open தொடரையும் வென்று இரு ஏரிபி 250 பட்டங்களை தொடர்ச்சியாக பெற்றார். இதன் மூலம் 2005 இல் ர.:.பேல் நடாலுக்கு பின் தொடர்ச்சியாக இரு பட்டங்களை பெற்ற ATP இளம் (19 வயது) வீரர் மற்றும் 2006 இல் நோவாக் ஜோகோவிச்சுக்கு பிறகு இரு முறை சாம்பியனான இளம் வீரர் என்ற சாதனைகளை படைத்தார்.

இதற்கிடையில், 2021 அவுஸ்திரேலியா பகிரங்க தொடரிற்கு தயாரான ர.:.பேல் நடால் உடன் இரு வாரங்கள் பயிற்சி பெறும் வாய்ப்பு சின்னர்க்கு மெல்பேர்ண் நகரில் கிடைத்தது. சின்னர் குறித்து நடால் மெல்போர்னில் 'I am sure he's going to finish this year in a high position. I don't have a doubt." என்று கூறியதையும் கவனிக்க வேண்டும். முன்னாள் முதல் நிலை வீரரான Andy Roddickக்கும் சின்னரை வரவேற்று புகழாரம் சூட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இரு மாதங்கள் கழித்து தன் 19 வயதில் ஏரிபி மாஸ்டர்ஸ் 1000 இறுதிக்கு முன்னேறிய பெருமையை 2021 மியாமி ஓபன் (Miami Open) தொடரின் இறுதியில் பங்கெடுத்து பெற்றுக் கொண்டார் சின்னர். 36 வருட கால மியாமி ஓபன் வரலாற்றில் முதல் இத்தாலியின் finalist மற்றும் 2வது youngest finalist என்ற சாதனைகளையும் தன் வசம் எடுத்துக் கொண்டார்.



தற்போது 19வயதில் ஏரிபி 500 பட்டத்தை வாசிங்டன் ஓபன் வென்றதோடு தரவரிசையில் பதினைந்தாவது (15) இடத்திற்கு முன்னேறி இருக்கிறார்.

டென்னிஸ் உலகினை கலக்கும் இந்த இளம் நட்சத்திரத்திற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். ஜான்னிக் சின்னரின் எதிர்கால சாதனைகளுக்கு காத்திருப்போம்.